விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 10 வியாழக்கிழமை (25.12.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 006

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL

CALL :- 222 5908/222 8812

# பெற்றோல் விலையைக் குறைக்க அரசுக்கு ஜே.வி.பி. காலக்கெடு

## தவறினால் பாரிய ஆர்ப்பாட்டமாம்

(கொழும்பு)

உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைய பெற்றோல் விலையை 100 ரூபாயாகக் குறைப்பதற்கு அரசாங்கத்துக்கு இரண்டு நாட்கள் கால அவகாசம் வழங்குவதாக ஜே.வி.பி. அறிவித்துள்ளது. எதிர்வரும் இரு நாட்களுக்குள் பெற்றோல் விலையை அரசாங்கம் குறைக்கவில்லையாயின் கொழும்பை மையமாகக் கொண்டு மக்களை இணைத்து பாரிய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படும் என நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸநாயக்க கூறினார். (12ஆம் பக்கம் பார்க்க)

பரசூட் கொத்துக் குண்டுத் தாக்குதலில் சேதமடைந்த கட்டடத்தைப் படத்தில் காணலாம்.



## வன்னியில் உணவுத் தட்டுப்பாடா? பொய் என்கிறார் ரம்புக்வெல

(கொழும்பு)

வன்னியில் உணவுத் தட்டுப்பாடு இருப்பதாக சர்வதேச அமைப்புகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களில் எந்த உண்மையும் இல்லை என பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல கூறினார்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவில் உணவுத் தட்டுப்பாடு எதுவும் இல்லை எனவும் கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து வரும் மக்களின் மனித உரிமைகள் மீறப்படவில்லை எனவும் நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப் (12ஆம் பக்கம் பார்க்க)

## மூன்றாவது விமான ஓடுபாதை அம்பகாமத்தில் கண்டுபிடிப்பாம்

(கொழும்பு)

புலிகளின் மூன்றாவது விமான ஓடுபாதை கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

கடந்த ஊடகவியலாளர் மாநாட்டின் பின்னர் கிளிநொச்சிக்கு கிழக்கே அமைந்துள்ள இரணைமடுப் பகுதியில் படையினர் விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீது தாக்குதல் நடத்தினர்.

பூநகரியைக் கைப்பற்றிய பின்னர் ஏ-9 பாதைக்கு கிழக்கே உள்ள சின்னப்பரந்தன் பகுதியை நோக்கி படையினர் தமது படை நகர்வினை மேற்கொண்டு பலப்படுத்தியுள்ளனர். (12ஆம் பக்கம் பார்க்க)

### நத்தார் வாழ்த்துக்கள்

நாட்டில் அமைதி ஏற்பட இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அனைவருக்கும் எமது நத்தார் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



-வலம்புரிக் குடும்பம்

## சாதாரண தர கணிதபாடப் பரீட்சை ஜனவரி 17இல் மீண்டும் நடக்கும்

### கல்வியமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

நடந்து முடிந்த கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் புதிய பாடத்திட்ட கணிதப் பாடத்தின் பகுதி இரண்டை மீண்டும் நடத்த அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதனைத் தெரிவித்தார்.

அண்மையில் நடந்து முடிந்த கல்விப் பொதுத் தராதர சாதாரண.தரப் பரீட்சையின் புதிய பாடத்திட்டத்துக்கான கணிதப்பாட பகுதி இரண்டு (12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப் பகுதியில் பரவலாக பரசூட் கொத்துக் குண்டு வீச்சு

(கிளிநொச்சி)

வன்னிப் பெருநிலப்பரப்பு எங்கும் படையினர் பரவலாக பரசூட் கொத்துக் குண்டுத் தாக்குதலை நடத்தத் தொடங்கியுள்ளதாக வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

வான்படையினர் நடத்தும் இந்தப் புதிய வகை பரசூட் கொத்துக் குண்டுகள் நிலத்தில் இருந்து 50 மீற்றர் உயரத்தில் வெடித்துச் சிதறி பொதுமக்களுக்குச் சேதங்களை உண்டாக்குவதாக கூறப்பட்டது.

நேற்றும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமையும் (12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் பேச அரசு முயற்சி

(கொழும்பு)

கிளாலி பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை (16.12.08) இடம் பெற்ற மோதலின் போது தமிழீழ விடுதலைப் புலிகளினால் பிடிக்கப்பட்ட படைத்தரப்பைச் சேர்ந்தவர் தொடர்பாக (12ஆம் பக்கம் பார்க்க)



கிறிஸ்மஸ் முதல்

முதன் முறையாக யாழ். மாவட்டத்தில்....

மாபெரும் பரிசுகளுடன்

SRI LANKA LIFE மினிமுத்து

குழந்தைகளுக்கான திட்டம்

விரையுங்கள் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் அதிகூடிய பங்குலாபம்

கிறிஸ்மஸ் மற்றும் புதுவருடத்தினை முன்னிட்டு

சிறிலங்கா இன்சூரன்ஸ்

MAK Cost Cutter Super Market

இணைந்து நடத்தும் மாபெரும் விற்பனைத் திருவிழா

18.12.2008 முதல் 18.01.2009 வரை

You are Safer with the Leader

என்றுமே இல்லாதவாறு குறைந்த கட்டுப்பணத்தில் கூடிய காப்புறுதித் தொகை

பொங்கல் வரை

உங்கள் காலாவதியான காப்புறுதிப் பத்திரங்களை புதுப்பிக்க ஒரு சந்தர்ப்பம்

வருட இறுதியில் மாபெரும் சீட்டிழுப்பில் 2 மில்லியன் ரூபா வரையான பரிசில்கள் (நிபந்தனைக்குட்பட்டது)

கிறிஸ்மஸ் மற்றும் புதுவருடத்தில் காப்புறுதியை ஆரம்பிக்கும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன.

# செஞ்சிலுவைச் சங்கப் பணியாளரின் கொலைக்கு அமைச்சர் டக்ளஸ் கண்டனம்

மனிதப் படுகொலை கலாசாரம் தொடரு வதை ஒருபோதும் நியாயப்படுத்த இயலாது என்றும் இவ்வாறான சம்பவங்கள் இனி மேலும் தொடராமல் இருப்பதற்கு மக்கள் முன்வந்து தங்களது எதிர்ப்புக்களைத் தெரிவிக்கவேண்டும் என்றும் மக்கள் தொடர்ந்தும் மௌனிகளாக இருந்தால் இவ்வாறான மனிதப் படுகொலைகள் தொடர வே வழிவகுக்கும் என்றும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை வருமாறு:

நேற்றுமுன்தினம் நல்லூர் கோவிலின் பின்வீதியில் வைத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பணியாளர் சுந்தரலிங்கம் கெங்காதரன் என்பவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடந்த இரு தசாப்தங்களுக்கும் மேலான காலம் முதல் தமிழ் பேசும் மக்களிடையே நிலவுகின்ற ஜனநாயக மின்மைச் சூழலானது தற்போது நன்மை தரக்கூடிய வகையில் மாறிவருகின்ற நிலையில் இவ்வாறான மனிதப் படுகொலைகள் எமது மக்களிடையே தொடர்ந்தும் பீதியை உண்டு பண்ணி வருவதாகவும் இவ்வாறான சம்பவங்கள் தொடராதிருக்க மக்கள் முன்வந்து தங்களது கண்டனங்களைத் தெரிவிக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (ச)

# யாழ். பல்கலைக் கழகத்துக்கு புதிய கட்டடத் தொகுதி

யாழ். பல்கலைக்கழகத்துக்கு 7,700 சதுர மீற்றர் பரப்பளவு கொண்ட கட்டடத்தொகுதி ஒன்றை அமைக்கவும் அதற்கு 400 மில்லியன் ரூபாவை ஒதுக்கவும் அமைச் சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை உயர் கல்வி அமைச்சர் பேராசிரியர் பிஸ்யூ ஏ.விஸ்வ வர்ணபால சமர்ப்பித்திருந்தார். முகாமைத்துவ பீடம் மற்றும் வாணிபவியல் மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் தங்குமிட வசதிக்காக இந்த கட்டடத்தொகுதி அமைக்கப்படவுள்ளது.

800 மாணவர்கள் மற்றும் 40 விரிவுரையாளர்களுக்கான இக்கட்டடத் தொகுதியின் நிர்மாணப் பணிகளை அடுத்த வருடம் ஆரம்பித்து நான்கு வருடங்களில் பூர்த்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. (ச)

# அனைவருக்கும் நத்தார் தினம் சமாதானம் நிறைந்ததாக வேண்டும்

## யாழ். இராணுவத் தளபதி வாழ்த்து

அனைவருக்கும், சமாதானம் மகிழ்வு நிறைந்த நத்தார் தினமாக வேண்டுமென யாழ். பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி யாழ். கிறிஸ்தவ மக்களுக்கு விடுத்திருக்கும் நத்தார் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இன்று உலகின் கோடிக்கணக்கான கிறிஸ்தவ பக்தர்களுடன் யாழ். குடாநாட்டு கிறிஸ்தவ மக்களும் மிகவும் பக்தியுடனும் கௌரவத்துடனும் கொண்டாடும் இயேசு பிரானின் பிறப்பான நத்தார் தினத்திலே யாழ். கிறிஸ்தவ பக்தர்களுக்கு வாழ்த்துச் செய்தியை விடுக்க கிடைத்தமையானது நான் பெற்ற பாக்கியமாக கருதுகிறேன்.

கிறிஸ்தவ மதத்தின் வழிகாட்டலில் வாழும் ஒருவருக்கு நேர்மையான பாதையில் சென்று தமது அயலவர்களுடன் சிநேகமாகவும் சகோதரத்துவத்துடனும் வாழ முடிகின்றது. அவ்வாறு நேர் வழியில் செல்லும் கிறிஸ்தவ பக்தரொருவர் ஒருபோதும் மற்றவரை வெறுப்பதற்கோ பழி வாங்கவோ முற்படமாட்டார். இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் சிறப்பை நோக்கும் போது உலகைப் படைத்த சர்வ வல்லமையையும் கொண்ட ஆண்டவரானவர் தனது புதல்வனை மனிதர்களுக்கு சேவை செய்யும் பொருட்டு இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட தினம் கத்தோலிக்க பக்தர்களுக்கு பெறுமதி மிக்க சமய அனுஷ்டானங்களைக்கொண்ட புனித தினமாகும். கிறிஸ்தவ பக்தர்கள்இந்நாளை மிகவும் வைபவ ரீதியாக கொண்டாடுவதுடன் சமய அனுஷ்டானங்களை மேற்கொண்டு ஒற்றுமையாக மகிழ்ச்சியாக களிப்பார்கள் என்பதை நான் அறிவேன்.

கிறிஸ்தவ பக்தர்கள் நத்தார் தினத்திலே தமது உற்றர் உறவினர்களுக்கும் ஏழை எளியவர்களுக்கும் எவ்வித பாகுபாடுமின்றி உதவி செய்வதானது இந்நாளில் சகோதரத்து வத்தையும் சிநேகிதத்தன்மையையும் வெளிப் படுத்தும் விஷேட அம்சமாகும். கிறிஸ்தவ பக்தர்களான நீங்கள் குறுகிய சமூக அரசியல் நோக்கங்களில் இருந்தும் விலகி தமது அயலவர்களுடன் கூடி வாழ்வதானது உண் மையிலேயே போற்றத்தக்கதாகும்.

கிறிஸ்தவ பக்தர்களான நீங்கள் தொன்றுதொட்டு இந்நாட்டில் அனைத்து சமூகங்களுடனும் சுக துக்கங்களைப் பகிர்ந்து ஒரே குடும்பமாக வாழ்ந்து வருகின்றீர்கள். சிறந்த கிறிஸ்தவ பக்தர்களான உங்களை உதாரணமாக கொண்டு இந்நாட்டில் அனைத்து சமூகங்களும் செயற்படுவார்களேயானால் தற்போது இந் நாட்டில் குடிகொண்டிருக்கும் விரோதப் போக்கான நிலை ஏற்பட்டிருக்காததுடன் அனைத்து இன மக்கள் மனங்களிலும் சமாதான எண்ணங்கள் நிலை கொண்டி ருக்கும்.

ஆகவே வைராக்கியம், குரோதத் தன்மை கொண்ட சூழலில் வாழும் நீங்கள் சமாதானத் தையும் சகோதரத்துவத்தையும் பரவவிடும் மேன்மையான கிறிஸ்தவ பக்தர்களாக வேண்டுமென்று இந்நத்தார் தினத்தில் திடசங் கற்பம் கொள்வீர்கள் என்று நம்புகின்றேன். நத்தார் பொழிவிலும் பக்தியிலும் பரவசம டைந்து மிளிரும் இன்றைய நாள் உங்கள் அனைவருக்கும் சமாதானம் மகிழ்வு நிறைந்த நத்தார் தினமாக வேண்டு மென்றுமனம் நிறைந்த பக்தியுடன் வாழ்த்துகின்றேன்.

என அவரது வாழ்த்துச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# 'எழுவோம் மீண்டுமாய்' இறுவட்டு வெளியீடு

சுனாமிக் கவிஞன் அரியாலையூர் எம்.வி. கே. குமணாவினால் தயாரிக்கப்பட்ட நிஷா சூறாவளியே உன் நினைவின் போது... "எழுவோம் மீண்டுமாய்" கவியிலும் இசையிலும் எனும் இறுவட்டு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கந்தரோடை ஜீவஒளி மிஷன் திருச்சபை மண்டபத்தில் வெளியிடப்பட உள்ளது. (ஓ)

# கப்பல் பயணத்துக்கான பெயர்களை உறுதிப்படுத்தல்

வடமாகாண முகாமைத்துவ உதவி யாளர்களிற்கான மாகாண பொது நிர்வாக அமைச்சினால் நியமனம் செய்யப்பட்ட 55 அலுவலர்களுடன் வட மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சினால் நியமனம் செய்யப்பட்ட 42 அலுவலர்க ளுக்குமான பிரயாண ஒழுங்கை நாளை மறுதினம் சனிக்கிழமை அன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

எனவே மேற்படி தெரிவு செய்யப்பட்ட விண்ணப் பதாரிகள் நாளை வெள்ளிக் கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயல கத்தில் தங்களது பெயர் விபரங்களை உறுதிப்படுத் திக்கொள்ளுமாறும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# வெளிவாரிப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகினால் நடாத்தப்பட்ட வணிக முதற்தேர்வு மற்றும் வணிகமாணி பகுதி I, பகுதி II, பகுதி III பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வெளியாகி யுள்ளன. மாணவர்கள் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்பதிவுகள் பரீட்சை அலகுடன் தொடர்பு கொண்டு தமது பெறுபேறுகளை எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை முதல் பார்வையிடலாம் என வெளிவாரிப் பட்டப்பதிவுகள் அலகின் இணைப்பாளர் கே.சிவராஜா அறிவித் துள்ளார். (ச)

# தமிழ் அரசியல் கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதம்

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப் பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் சாகும் வரையிலான உண்ணாநிலை போராட்டம் நடத்த தீர்மானித்துள்ளனர்.

களுத்துறை, வெலிக்கடை, பூசா, மகசீன் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப் பட்டுள்ள சுமார் 1200க்கும் அதிகமான கைதிகளே சாகும் வரை உண்ணாநிலைப் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்துள்ளனர்.

அரசியல்வாதிகளின் உறுதி மொழி யினால் உண்ணாநிலை இருக்கும் முடிவை தாங்கள் மாற்றிக்கொண்டதாகவும் தெரிவித் துள்ள கைதிகள் இம்முறை உறுதி மொழிகள் எதனையும் கேட்கப்போவதில்லை எனவும் கூறியுள்ளனர். (ச–5)

# தவறி விட்டது

கந்தையா இராஜேஸ்வரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை இல.532203708V யாழ். நகருக்கும் றக்கா வீதிக்குமிடையில் நவம்பர் மாத இறுதியில் தவறிவிட்டது. இதனைக் கண் டெடுத்தவர்கள் தயவுசெய்து அடையாள அட்டையில் உள்ள றக்கா வீதி முகவரிக்கு தபால் மூலம் அல்லது நேரில் ஒப்படைக் கும்படி கேட்டுக்கொள்கின்றேன். (2022)

# மரக்கறி விதைகள் பெற்றுக்கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

புலோலி மற்றும் அம்பன் கமநல சேவைத்திணைக்களத்தில் மரக்கறி விதை களை பெற்றுக்கொள்ளலாம் என கமநல உத்தியோகத்தர் உருத்திரேஸ்வரன் அறிவித் துள்ளார்.

தேவையான விவசாயிகள் அவற்றை பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)


# கண்ணீர் அஞ்சலி



அமரர் சிவசுந்தரலிங்கம் கெங்காதரன்

அன்னாரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும் அதேவேளை அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம்.

ICRC நண்பர்கள்

(2024)

# அறிவித்தல்

வடபகுதி லயன்ஸ் கழகங்களின் IT மற்றும் Internet சேவையை விஸ்தரிக்க ஆனைக்கோட்டையில் தலைவரால் 25.12.2008 வியாழக்கிழமை நடத்தப்பட இருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் வடமராட்சி லயன்ஸ் கழக காரியாலயத்தில் காலை 10 மணிக்கு நடைபெறுமென அறியத் தருகின்றோம்.

தகவல்: லயன் V. சிவகுமார்
வடமராட்சி லயன்ஸ் கழகம்.

(C-1907)

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார் தின நல்வாழ்த்துக்கள்

லாவண்யா பல் மூக்கு கண்ணாடியகம்

மிதப்புப்பற்களுக்கு நிரந்தர கிளிப் செய்து கொடுக்கப்படும்

552, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(போதனா வைத்தியசாலை முன்பாக)

ஞாயிற்றுக்கிழமைகளில் 8.30 – 12.00 மணிவரை திறந்திருக்கும்

கிளை: பருத்தித்துறை வீதி,
நெல்லியடி. (பொலிஸ் நிலையம் முன்பாக)

# இன்று ஒரு தகவல்

## கிறிஸ்மஸ்

'வலதுகை கொடுப்பது இடதுகைக்குத் தெரியக்கூடாது' என்று சொல்வார்கள். ஆனால் இப்பொழுதெல்லாம் அப்படியா? இருக்கிறது? வலது கை வாங்குவது இடதுகைக்குத் தெரிவதில்லை".

வாழ்நாள் முழுவதும் கொடுப்பது யாரென்று தெரியாமலே கொடுத்துவிட்டுப்போன பெரியவர் ஒருவர் இருந்திருக்கிறார்.

கி.பி.4ஆம் நூற்றாண்டில் ஹங்கேரி நாட்டில் ''சாந்தா கிளாஸ்'' என்ற பாதிரியார் வாழ்ந்து வந்தார். அவருக்கு மிகவும் இளகியமனம் – தயாள குணம்.

அவர் என்ன செய்வார் தெரியுமா?

தினமும் நள்ளிரவில் கிளம்பி ஏழை எளியவர்கள் வீடுகளுக்கெல்லாம் போவார். அவரவர் தகுதிக்கேற்ப சில பொற்காசுகளை அவர்கள் வீட்டு வாசலில் வைத்துவிட்டு வந்துவிடுவார். இவர் இப்படி வைத்துவிட்டு வருவது யாருக்குமே தெரியாது.

காலையில் அந்த வீட்டுக்காரர்கள் கதவைத் திறக்கும் போது இந்தப் பொற்காசுகள் அவர்கள் கண்ணில்படும். உடனே அவர்களெல்லாம் ஆச்சரியப்பட்டுப் போவார்கள். யார் இப்படி காசு வைத்துவிட்டுப் போகிறார்கள் என்ற விபரம் கடைசிவரைக்கும் அவர்களுக்குத் தெரியவேயில்லை.

இந்த விடயம் ஒரு பெரிய மர்மமாகவே இருந்து வந்தது. ஊர் முழுவதும் பரபரப்பாகப் பேசப்பட்டது.

யாருக்கும் தெரியாமல் வீட்டுக்கு வீடு யார் இப்படி காசு வைத்துவிட்டுப் போகிறார்கள் என்ற உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று பலர் முயற்சி செய்தார்கள். யாராலும் அதைக் கண்டுபிடிக்கமுடியவில்லை. இந்த நிலையிலும் கூட பாதிரியார் தன் வேலையை நிறுத்தவில்லை. யாருக்கும் தெரியாமல் வீட்டுக்கு வீடு காசு வைத்துக்கொண்டுதான் இருந்தார்.

அப்படிப்பட்ட பெரியவர் திடீரென ஒருநாள் இறந்துவிட்டார்.

அதன்பின்னர் தான், இதுவரைக்கும் இப்படி காசு வைத்துக் கொண்டு வந்தது இந்தப் பெரியவர் என்ற விடயம் எல்லோருக்கும் தெரியவந்தது. அதிலிருந்து அவரை ஒரு தெய்வமாகவே நினைத்து எல்லோரும் கொண்டாட ஆரம்பித்தார்கள்.

அந்தப் பாதிரியாரின் பெயர் "நிக்கொலஸ்" தான். இருந்தாலும் அவரை எல்லோரும் ''சென்ட் நிக்கொலஸ்'' என்று குறிப்பிட்டு அழைத்தனர்.

எல்லோருக்கும் பொற்காசுகளை கொடுத்துக்கொண்டு வந்ததால் அவரை கடவுள் அருள் பெற்றவராகவே கருதினார்கள். "சென்ட் நிகொலஸ்" என்ற பெயர் மருவி காலப்போக்கில் "சாந்தா கிளஸ்'' என்று ஆயிற்று

அமெரிக்காவில் ''இந்தியானா'' என்ற நகரத்தில் உள்ள "சாந்தா கிளஸ்" என்ற பூங்காவில் இந்தப் பாதிரியார் நினைவாக ஒரு பெரிய சிலை வைத்திருக்கிறார்களாம். 22 அடி உயரத்தில் 40 தொன் எடையுள்ள இந்த சிலை மாதிரி வேறெங்கும் இவருக்கு சிலை கிடையாது.

நேற்றிரவு (டிசம்பர் 24) சிறியவர்களெல்லாம் அவர்களுடைய புதிய ஆடைகள், விளையாட்டு சாமான்கள் எல்லாவற்றையும் ஒரு பையில் போட்டுக்கட்டி அவர்களின் படுக்கைக்குப் பக்கத்தில் வைத்திருப்பார்கள்.

இன்று காலை எழுந்தவுடன் இந்தப்பையை பிரித்து உள்ளே இருக்கும் பொருட்களை வணங்கி விட்டுத்தான் படுக்கையை விட்டு எழும்புவார்கள். ''சாந்தா கிளஸ் பாதிரியார்'' வந்து இதையெல்லாம் பரிசாக கொடுப்பதாக ஒரு நம்பிக்கை.

முதலில் சிறியவர்களுக்குத்தான் பரிசு வழங்கும் பழக்கம் ஏற்பட்டது. பின்னர் தான் பெரியவர்களுக்கும் பரிசுகொடுக்கும் பழக்கம் வந்தது.

இங்கிலாந்து ராஜா முதலாவது எட்வேட்டுக்கு பிரான்ஸ் ராஜா ஒரு பெரிய யானையை கிறிஸ்மஸ் பரிசாகக் கொடுத்தார்.

அதுவரை இங்கிலாந்து மக்களுக்கு யானை யென்றால் எப்படி இருக்கும் என்றே தெரியாது அதனால் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து அதை வேடிக்கை பார்த்தார்களாம்.

ஜேம்ஸ் என்ற ராஜா காலத்தில் ஸ்பெயின் அரசன் ஒரு யானையுடன் 5 ஒட்டகங்களையும் சேர்த்து கிறிஸ்மஸ் பரிசாக இங்கிலாந்துக்கு அனுப்பினானாம்.

இப்பொழுதெல்லாம் வாழ்த்து அட்டை அனுப்புவது தான் வழக்கம்.

இப்படியெல்லாம் யேசுநாதர் பிறந்த நாளை கொண்டாடுவது எதற்காக?

சமாதானம் –அன்பு – மனிதநேயம் இதை எல்லோரும் புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான். இப்பொழுதெல்லாம். மனிதநேயத்துக்கு பஞ்சம் ஏற்பட்டு விட்டது. இரண்டு நண்பர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

ஒருவர் சொன்னார். "நான் நிறைய பாவம் பண்ணியிருக்கிறேன். அதனால் நரகத்துக்குத்தான் போவேன் என்றார்.

உடனே அவரது நண்பர் "அப்படியானால் நானும் கூட வந்து விடுவேன்" என்றார்.

இதைக் கேட்டதும் அவருக்கு அன்புமிகுதியால் ஆனந்தக் கண்ணீரே வந்துவிட்டது.

நட்பென்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும் என்று நினைத்தார்.

"ஏன் அப்படி சொல்றீங்க" என்று கேட்டார்.

அதற்கு அவர், ''நரகத்தில் மனிதனை எண்ணெய் கொப்பறையில் போடுவாங்களாமே அது எப்படி இருக்கும் என்று பார்ப்பதற்கு ஆசையாக இருக்கிறது. அதுதான் உங்களை எப்படி போடுகிறார்கள் என்று பார்க்கலாம் என்று ஆசைப்பட்டு அப்படி சொன்னேன்'' என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நீதியரசர்களுக்கு சம்பள உயர்வு அமைச்சரவை தீர்மானம்

(கொழும்பு)

பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதியரசர்கள், மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசர் உட்பட அவற்றின் நீதியரசர்கள் ஆகியோருக்கு சம்பள உயர்வு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதன்படி பிரதம நீதியரசரின் சம்பளத்தை 71 ஆயிரத்து 500 ரூபாவாகவும் உயர் நீதிமன்ற நீதியரசர்களினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தலைமை நீதியரசரினதும் சம்பளத்தை 65 ஆயிரம் ரூபாவாயரசர்களின் சம்பளத்தை 63 ஆயிரத்து 500ரூபாவாகவும் அதிகரிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

உயர்நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் தொடர்பாக 2004 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 9ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சம்பளத்திற்குப் பதிலாக இப்புதிய சம்பளம் வழங்கப்பட வேண்டும் என தீர்மானி க்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதியரசர்கள், மேன் முறையீட்டு தலைமை நீதியரசர் மற்றும் அவற்றின் நீதியரசர்கள் ஆகியோரின் சம்பளத்தின் 25வீதத்துக்குச் சமமான தொகையை மாதாந்த தனிப்பட்ட கொடுப்பனவாக 2008 யூலை 1ஆம் திகதிமுதல் அமுலுக்கு வரும் வகையில் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசருக்கு 27ஆயிரத்து 500ரூபாவையும் உயர் நீதிமன்ற நீதியரசர்களுக்கும் மேன்முறையீட்டு தலைமை நீதியரசருக்கும் 25ஆயிரம் ரூபாவையும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களுக்கு 22 ஆயிரத்து 500ரூபாவையும் மாதாந்த வீட்டு வாடகைத் தொகையாக வழங்கவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

2004ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட வீட்டு வாடகைக் கொடுப்பனவுக்கு பதிலாக இந்தத் தொகை வழங்கப்படவுள்ளது.

கடந்த யூலை 1ஆம்திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் பிரதம நீதியரசருக்கு உபசரிப்புக் கொடுப்பனவாக மாதாந்தம் 3ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படவுள்ளது. இந்தப் பிரேரணைகளை பாராளுமன்றத்தில் சமர்ப் பிப்பதற்கான நிகழ்ச்சி நிரலிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. (5)

# இலவச சீருடை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு அடுத்த ஆண்டிற்கான சீருடை விநியோகம் கோட்டரீதியாக வலயக்கல்வி அலுவலகத்தில் விநியோகிக்கப்படவுள்ளது.

இதில் உடுவில் 26ஆம் திகதி வெள்ளியும், சண்டிலிப்பாய் 27 ஆம் திகதி சனியும், சங்கானை 28 ஆம்திகதி ஞாயிறும், தெல்லிப்பழை 29 ஆம் திகதி திங்கட்கிழமையும் காலை 9மணி முதல் 12 மணிவரையும் பெற்றுக்கொள்ளலாம் என்றும்,

அவ்வவ் கோட்டப் பாடசாலை அதிபர் கள் தவறாது குறிப்பிட்ட தினங்களில் சீருடைகளைப் பெற்று 31 ஆம் திகதி புதன் கிழமை விநியோகிக்குமாறு வலயக் கல்விப் பணிபாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுக் கொள்கிறார். (ஓ)

## இராசி பலன்

25.12.2008

(மார்கழி 10, வியாழக்கிழமை)

திரயோதசி பிற்பகல் 2.13 மணிவரை

அனுசம் பிற்பகல் 3.58 மணிவரை

இராகுகாலம் 1.57-3.27 மணிவரை

சுபநேரம் 7.57-9.27 மணிவரை

கிறிஸ்மஸ்

| | |
|---|---|
| மேடம் | காரிய தடங்கல், வீண் பிரச்சினை, அபகீர்த்தி, உடல்நலக்குறைவு |
| இடபம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, தொழில் நன்மை, போசனசுகம், பிரயாணம். |
| மிதுனம் | சுபநிகழ்வு, சத்துருஜெயம், முயற்சி கைகூடும், தொழில் விருத்தி. |
| கடகம் | வியாபார சிந்தை, ஆரோக்கியக் குறைவு, மனச்சஞ்சலம், பணவிரயம் |
| சிங்கம் | மாதா சுகம், ரோகநிலை, கல்வியில் ஆர்வம், சுபசெலவு. |
| கன்னி | சகோதரர் உதவி, பிரயாணம் நன்மை காரிய அனுகூலம் விருந்து பசாரம். |
| துலாம் | மனக்கிலேசம், முயற்சி தடங்கல், எதிர்பாராத செலவு, போசன சுகக்குறைவு |
| விருச்சிகம் | கற்பனை மிகுதி, உறவினர் வருகை, நல்ல முயற்சி, போசன சுகம். |
| தனுசு | காரிய அலைச்சல், சுபசெலவு, உடல் நலக்குறைவு, பிரயாணம் |
| மகரம் | சகோதரர் உதவி, காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை புகழடைதல் |
| கும்பம் | தேகநலன், கடின உழைப்பு, நண்பர்கள் உதவி, போசன சுகம் |
| மீனம் | புதிய முயற்சி, கட்டுப்பாடு, பிதா சிந்தை, சரீரப் பிரயாசை |

வளவன்

# வடிகால் அமைக்க ஒத்துழைப்பு வழங்குக

(சாவகச்சேரி)

மட்டுவில் வடக்கு சேச் வீதியில் மழைக் காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்காது வழிந் தோடுவதற்கு வசதியாக சுமார் மூன்று இலட்சத்து 60 ஆயிரம் ரூபா செலவில் வடிகால் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வசதியாக இவ் வீதியில் உள்ள காணிச் சொந்தக்காரர்கள் வீதியை அகலமாக்கும் போது சாவகச்சேரி பிரதேச சபையின் வேண்டுகோளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஓ-2-29)

# விற்பனை நிலைய ஆரம்ப நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

"துளிர்களின்" சுயதொழில் பயிற்சி நிலையமும், அதன் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்காக "மூன் ஸ்ரார் (பிறைவேற்) லிமிரட்" நிறுவனத்தையும் கோலாகலமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு துளிகள் இயக்குநர் கே.எஸ்.ரகு தலைமையில் ஜனவரி மாதம் 2ஆம்திகதி வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு பலாலி வீதி, தபால் பெட்டி சந்தி, திருநெல்வேலியில் அமைந்துள்ள துளிர்கள் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இலங்கை தொழில் அதிகார சபை மாவட்ட இணைப்பாளர் ஆர். அகிலன், கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.மோகனேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதில் முதற்கட்டமாக ஜே/114 கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள 30பேர் தெரிவு செய்யப்பட்டு தையல் பயிற்சி வழங்கப்படவுள்ளது. (ஓ-4)

# பறவைக் காய்ச்சல் அபாயம் இலங்கையில் இல்லையென அறிவிப்பு

(கொழும்பு)

உலகின் பல நாடுகளில் கடந்த சில தினங்களாக பரவிவரும் தொற்றக்கூடிய பறவைக்காய்ச்சல் நோய் இலங்கையில் இல்லையென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நோயானது வெளிநாடுகளில் இருந்து நாட்டிற்குள் வரும் பறவைகள், கோழிகள், பன்றி மற்றும் குதிரை உள்ளிட்ட விலங்குகளுக்கு பரவக்கூடிய வாய்ப்பு இருப்பதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இந்த நோயினை தடுக்கும் பொருட்டு விசேட வேலைத்திட்டம் ஒன்றினை மேற்கொண்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கென உலக சுகாதார ஸ்தாபனத்துடன் இணைந்து 350 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் இந்த வேலைத் திட்டத்தை மேற்கொள்ளப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்திய அசாம் மாநிலத்தில் பறவைக் காய்ச்சல் நோய் தொற்றின் காரணமாக கடந்த வாரம் 2 லட்சத்து 50 ஆயிரம் கோழிகள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5)

# வலிகாமம் கல்வி வலயத்தில் பாடசாலைகளின் சிறிய திருத்த வேலைகளுக்கு 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

கடந்த மாத இறுதியில் ஏற்பட்ட நிஷா புயல்,கடும் மழை காரணமாக வலிகாமம் கல்வி வலயத்தில் பாதிப்படைந்த பாடசாலைகளில் முதற்கட்டமாக சிறு தேசங்களை திருத்தியமைப்பதற்காக 5இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே வலிகாமம் கல்வி வலயத்திற்கென 2008 ஆம் ஆண்டுக்கு வடக்கு மாகாண சபையால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் 5இலட்சத்து 50 ஆயிரம் ரூபா மீதமிருந்ததாகவும் அதனையே இச் செலவுக்கு பயன்படுத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் குறித்த அனர்த்தத்தினால் பாடசாலைகளுக்கு ஏற்பட்ட பாரிய அழிவுகள் குறித்து வடக்கு மாகாணக் கல்வி அமைச்சே தீர்மானமெடுக்குமெனவும் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார். (5)

## கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி கடந்த 24 ஆம் திகதி முதல் கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெற்று வருகின்றது.


இத்தொடரில், ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஜொனியன்ஜ் விளையாட்டுக் கழகம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மோதவுள்ளன. (ஓ-4)

## மத்தியஸ்தர் தெரிவுக்கான பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கரபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் புதிய மத்தியஸ்தர் தெரிவுக்கான பயிற்சி வகுப்புக்களை எதிர்வரும் 27,28 மற்றும் ஜனவரி 3,4 ஆகிய திகதிகளில் யாழ்.இந்துக் கல்லூரியில் நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளனர்.

எனவே கரப்பந்தாட்ட மத்தியஸ்தர்களாக இணைய விரும்புபவர்கள் குறித்த திகதிகளில் காலை 9 மணிக்கு சமுகம் தந்து பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளு மாறு சங்கச் செயலாளர் ந.சுதேஸ்குமார் அறிவித்துள்ளார். (ஓ)




## யாழ்.செய்திகள்

## கிணறுகளுக்கு குளோரின் இடும் செயற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் முதற்கட்டமாக பொதுக்கிணறுகள் மற்றும் பாடசாலைக் கிணறுகள் ஆகியவற்றிற்கு குளோரின் இடும் செயற்பாடு இடம்பெற்றது.

அதேபோன்று இரண்டாம் கட்டமாக 22 ஆம்திகதியிலிருந்து ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கியிலிருந்து அமுல் கிறீம் ஹவுஸ் வரையில் உள்ள சகல கிணறுகள் குளோரின் இடப்பட்டது.

நேற்று புதன்கிழமையிலிருந்து மூன்றாம் கட்ட செயற்பாடாக வண்ணார்பண்ணை, இந்துமகளிர் கல்லூரி வீதி, ஆத்திசூடி வீதி, பஜார் பகுதி, ஸ்ரான்லி வீதி, அத்தியடி, மடம் வீதி, நல்லூர் பகுதி, அரசடி வீதி, செட்டியார் தோட்டம்,கச்சேரி நல்லூர் வீதி ஆகிய இடங்களில் யாழ்.மாநகர சபையினரால் பத்து செயலணிகளைக் கொண்டு துரித கதியில் குளோரின் இடும் செயற்பாடு இடம்பெற்று வருவதாகவும் மேலும் இப்பணி விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் யாழ்.மாநகர சபை ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ஓ)

## ஊரடங்கு நேரத்தில் துணிகரத் திருட்டு


(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை சுருவில் வீதி நீதிமன்றம் அருகேயுள்ள 'ரவிராஜ்' உணவகத்தில் கடந்த 23 ஆம்திகதி இரவு ஊரடங்கு நேரத்தில் உட்புகுந்த திருடர்கள் பல இலட்சம் பெறுமதியான பிஸ்கட், சோடா, கேக், ஹோர்லிக்ஸ்,சிகரெட் பண்டல், உணவு தயாரிக்கும் பொருட்கள், பெட்டியில் இருந்த வியாபாரப் பணம் யாவற்றையும் திருடிச் சென்றுள்ளதாகத் தெரியவருகிறது. (ஓ-72)

## மத்திய கல்லூரி மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கல்வி பயிலும் தரம் 6 தொடக்கம் தரம் 9வரை கற்கும் மாணவர்கள் அனைவரையும் பாடசாலை சீருடையுடன் நாளை மறுநாள் சனிக்கிழமை காலை 8மணிக்கு கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (ஓ)



அண்மையில் இடம்பெற்ற வாகன விபத்தில் மரணமான தி.குருநாதனின் காப்புறுதிக் கொடுப்பனவிற்கான காசோலையினை இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.கிளை அமைப்பாளர் எஸ்.என்.கதிரவேலு மரணமானவரின் குடும்பத்தவரிடம், அவர்களுடைய வதிவிடத்தில் வைத்து வழங்குவதனையும், ஆலோசகர் செல்வி ச.தேவனி நிற்பதையும் படத்தில் காணலாம்.

## திருநாள் திருப்பலி

(ஊர்காவற்றுறை)


கிறிஸ்மஸ் திருநாள் திருப்பலி எதிர்வரும் 25 ஆம்திகதி வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு புனித மரியாள் ஆலயத்தில் நடைபெறவுள்ளதாக பங்குத் தந்தை தெரிவித்தார். (ஓ-72)

## மகரஜோதி விழா

(கோண்டாவில்)

கோண்டாவில் சபரீச ஐயப்பன் தேவஸ்தான வருடாந்த மகரஜோதி மஹோற்சவ மண்டல பூஜை பெருவிழா நவம்பர் 22 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இந்நிகழ்வில் இன்று வியாழக்கிழமை மாலை 4மணிக்கு நெய்த் தேங்காய் (நெய் நிரப்புதல்) பூஜையும் நாளை வெள்ளிக்கிழமை காலை இருமுடி கட்டுதல் மற்றும் 18 ஆம் படி ஏறுதலும் மாலை மண்டல பூஜையும் நாளை மறுதினமும் சனிக்கிழமை அதிகாலை 5 மணிக்கு நெல் அபிஷேகம் ஆகியன இடம்பெறவுள்ளது. (ஓ-4)



அகில இலங்கைத் திருவள்ளுவர் சபை நடத்தும் ஐம்பத்தொன்பதாவது வருட திருவள்ளுவர் தினத்தை முன்னிட்ட இலக்கியப் போட்டியின் பரிசளிப்பு விழாவில் சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் வே.கந்தசாமி, பிரதம விருந்தினர் ச.லிங்கநாதன், சட்டத்தரணி ஞானலோஜினி சிவஞானம் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும், அருகில் கோண்டாவில் றோ.க.த.க. பாடசாலை அதிபர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

திருமதி சந்திரா தனபாலசிங்கம் எழுதிய "வைரப்பனை மரம்" சிறுவர்கதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3மணிக்கு மானிப்பாய் பிரதேசசபை கலாசார மண்டபத்தில் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் இ.குமரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.வசந்தசேனன், சிறப்பு விருந்தினராக சுதுமலை வைத்திய கலாநிதி பி.உரோமகேஸ்வரன், கௌரவ விருந்தினராக மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் திருமதி பி.சிவலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-4)

## யாழ்.இளைஞன் குருநாகலில் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் குருநாகல் மத்துரட்ட பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

டோகாவிலிருந்து வந்து யாழ்ப்பாணத்துக்கு வருவதற்காக காத்திருந்த போது கடந்த 15ஆம் திகதி இவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இயேசுராஜா அசோக்குமார் (வயது 21) என்பவரே கைது செய்யப்பட்டவராவார். (ஓ)

## யோகாசன வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் இலவச யோகாசன வகுப்புக்கள் 3ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு நாவலர் மணி மண்டபத்தில் அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப் பயிற்சி நெறியில் கலந்துகொள்ள விரும்புவோர் உங்கள் பெயர்களை நாவலர் மணிமண்டபத்தில் பதிவு செய்யுமாறும் இப் பயிற்சி வகுப்புக்கள் ஆண்கள், பெண்கள், நோயாளர் என வேறு வேறு பிரிவாக நடைபெறவுள்ளதாகவும் இப் பயிற்சி வகுப்புகளின் 1 பிரிவு மூன்ற மாத காலத்திற்கு நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-4)

## யாழ்.இந்துக் கல்லூரி ஆசிரியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக் கல்லூரியில் கடமையாற்றும் சகல ஆசிரியர்களையும் நாளை வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு கலந்துரையாடல் தொடர்பாக யாழ்.இந்துக் கல்லூரியில் கூடுமாறு அதிபர் கேட்டுள்ளார். (ஓ)

## ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை,நெடியகாடு,கணபதி படிப்பகத்தின் 41 ஆவது ஆண்டு விழா 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு வல்வை மகளிர் கலையரங்கத்தில் கணபதி படிப்பக தலைவர் பூ.அகமணி தேவர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய " முன்பள்ளிகள் பதில் உதவிக் கல்விப் பணிப்பாளர் த.தனேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வல்வெட்டித்துறை நகரசபை செயலாளர் கு.அமிர்தலிங்கம், வல்வை மகளிர் மகாவித்தியாலய அதிபர் திருமதி கு.நகுலாம்பிகை ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அத்துடன் பரிசில்கள் ,சான்றிதழ்கள் வழங்குதலும் ,கணபதி பாலர் பாடசாலை, நடன வகுப்பு, தையல் பாடசாலை மாணவ, மாணவிகளினதும் நெடியகாடு இளைஞர்களினதும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

## வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட நாவாந்துறை பிரதேச வளர்ப்பு நாய்களுக்கான (A.R.V) விலங்கு விசர் நோய் தடுப்பூசி நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9-10 மணிவரை சென்நீக்கலஸ் சனசமூக நிலையத்திலும், முற்பகல் 10-11 மணிவரை கோவில் ஒழுங்கை கலைவாணி சனசமூக நிலையத்திலும், முற்பகல் 11-12 மணிவரை வில்லூன்றிப் பிள்ளையார் கோவிலடியிலும், பிற்பகல் 2-3 மணிவரை ஆறுகால்மடம் அறிவொளி சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 3-4 மணிவரை செழியான் வீதி வைரவர் கோவிலடியிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு இத் தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். ம. மரியதாசன் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ-4)

# இலங்கையில் தமிழர் 21

## மக்கள் வருகை

### தென் கிழக்கு ஆசியா

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் தென்னிந்தியா இலங்கைப் பிராந்தியத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இடம்பெற்ற குடியிருப்புக்களைச் சரியாக விளங்கிக் கொள்ளவும் இப் பிராந்தியத்தில் பரவிய பல்வகைச் செல்வாக்குகளை அடையாளங் காணவும் தென்கிழக்கு அசியப் பின்னணியும் முக்கியமானது.

இற்றைக்கு 40,000 ஆண்டுக்கு முன் தென்கிழக்கு ஆசியாவின் மக்கள் பெரும்பாலும் ஆஸ்திரலோ மெலனீசியர் என்ற இனப்பிரிவைச் சேர்ந்த மக்களாகக் காணப்பட்டனர் என்பது வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை ஆய்வு செய்வோர் கருத்தாகும். தற்காலத்தில் நெகிரிட்டோ (Negrito) என்ற இனப் பிரிவினர் அதிக கலப்பி ன்றி வங்காள விரிகுடாவிலுள்ள அந்தமான் தீவுகளில் வாழ்கின்றனர்.

இந்த இனப் பிரிவினர் மலேஷியாவின் சில பகுதிகளிலும் ஸெமாங் என்ற பெயர் தரித்தோராய் வாழ்வதைக் காணலாம். அவ்வாறே, தாய்லாந்து மற்றும் பிலிப்பீன் தீவுகள் ஆகிய பிற தென்கிழக்கு ஆகிய நாடுகளிலும் இந்த இனப் பிரிவினர் வாழ்கின்றனர்.

இவ்வாறு அங்குமிங்குமாக ஒதுக்கிடங்களில் தென் கிழக்கு ஆசிய நாடுகளில் தற்காலத்தில் வாழும் நெகிரிட்டோ இனப் பிரிவினர் முன் ஒரு காலத்தில் தென்கிழக்கு ஆசியாவில் பெரும்பாகத்தில் வாழ்ந்த ஆஸ்திரலோ மெலனீசியன் மக்களின் வழித்தோன்றல்கள் என்பது அறிஞர் கருத்தாகும். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இந்தியத் துணைக் கண்டத்திலும் நெகிரிட்டோ இனப் பிரிவினர் வாழ்ந்தனர் என்று கொள்வதால், அவர்கள் தென்கிழக்காசியாவில் இருந்து அங்கு வந்தனர் எனலாம்.

ஆஸ்திரலோ மெலனீசியன் மக்களுள் ஒரு பிரிவினர் இற்றைக்கு 40,000 ஆண்டுகளுக்கு முன் தெற்கு நோக்கி இன்றைய நியுகினி, ஆஸ்திரேலியா ஆகிய இடங்களுக்குச் சென்று குடியேறினர். இவ்வாறு இவர்கள் கடல் கடந்து சென்றமை உலக வரலாற்றில் நாம் அறியக் கூடிய மிகப் பழைய கடல் கடப்புகள் எனக் கொள்ளப்படுகின்றது.

இது மட்டுமன்றி, தொடர்ந்து தென்கிழக்காசியாவிலிருந்து மக்கள் குழுக்கள் கடல் கடந்து தூரப் பிரதேசங்களுக்குச் சென்றனர். இவற்றுள் மிகவும் முக்கியமானது. ஆஸ்திரேனீசிய மொழி பேசுவோருடைய புலப்பெயர்ச்சியாகும். தென்கிழக்கு ஆசியாவில் தொடங்கி, உலகைச் சுற்றி அரை வழி தூரம் ஒரு புறம் ஆபிரிக்காவின் கிழக்குக் கரையை அடுத்துள்ள மடகாஸ்கார் வரையும், மறுபுறம் பசுபிக் பெருங்கடலின் ஈஸ்டர் தீவு வரையும் ஆஸ்திரோனீசிய மொழி பேசுவோர் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் கடல் கடந்து சென்றுள்ளனர்.

ஆஸ்திரேனீசிய மொழி பேசுவோர் தென்கிழக்கு ஆசியாவின் தீவுகளிலிருந்து இடம் பெயர்ந்த மக்களாவர். இம் மக்களைப் போல, பிறர் தென்கிழக்கு ஆசியாவின் கண்டம் அண்டிய நாடுகளாகிய கம்போடியா, தாய்லாந்து மற்றும் பர்மா போன்ற இடங்களிலிருந்து இந்தியத் துணைக் கண்டத்தை நோக்கி ஆதிகாலத்தில் இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்தியாவின் கிழக்குப் பகுதிகளில் பேசப்படும் முண்டாமொழி தென்கிழக்கு ஆசியாவின் ஆஸ்திரோ ஆசிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் ஆஸ்திரோ–ஆசிய மொழி பேசுவோர் துணைக் கண்டத்துக்கு இடம் பெயர்ந்தமைக்கு முண்டாமொழிகள் சான்று பகரும். இம் மொழிகள் கிழக்காசியாவிலும் அப்பாலும் இந்து–ஆரிய மொழிகள் பரவுமுன் பேசப்பட்டன என்பது மொழியியலாளர் கருத்தாகும்.

தென்கிழக்காசிய மக்களின் இடப்பெயர்ச்சிகள் மட்டுமின்றி அங்கிருந்து பரவிய வேறு செல்வாக்குகளும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துத் தென் ஆசியாவின் பொருளியல் நிலை தொடர்பாக முக்கியத்துவம் பெறுகின்றன. சிறப்பாக, தென்கிழக்கு ஆசியாவிலிருந்து பரவிய உணவுக்குதவும் பயிர் வகைகளைப் பற்றி அறியத் தென்கிழக்கு ஆசியத் தொடர்பு முக்கியமானது. தென் ஆசியாவின் மிக முக்கிய பயிர்களுள் ஒன்றாகிய நெற்பயிர் முதன் முதல் தென்கிழக்கு ஆசியாவின் வடபகுதியில் பயிர்ச் செய்கைக்குரிய ஒரு தானிய வகையாக மாற்றப்பட்டது என நம்பப் படுகின்றது.

இதேபோன்று, வாழை, கரும்பு மற்றும் சில கிழங்கு வகைகள் தென்கிழக்கு ஆசியாவில் பயிர்களாக்கப் பெற்று வேறிடங்களுக்குப் பரவின என்ற கருத்துப் பெரிதும் வலுப்பெற்றுள்ளது. இந்தியா, இங்கை ஆகிய இடங்களுக்குத் தென்கிழக்கு ஆசியாவிலிருந்தே தென்னையும் கொண்டுவரப்பட்டது என்று எண்ண இடமுண்டு.

### தென் இந்தியா

தென் இந்தியாவில் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் பின்னணியிலேதான் இலங்கையில் இடம்பெற்ற ஆதி மனிதர் வருகையை விளங்கிக்கொள்ள வேண்டும். பழைய கற்காலம் முழுவதிலும் இலங்கையும் தென்னிந்தியாவும் இணைந்திருந்தன. இற்றைக்கு 7000 ஆண்டுகளுக்கு முன்னர்தான் இறுதியாக இலங்கைத் தீவு துணைக் கண்டத்திலிருந்து பிரிந்தது. அதன் பின்னரும் கூட இரண்டு நிலப் பகுதிகளுக்கும் இடையில் பல சிறுதீவுகள் இருந்தமையாலும் கடல் ஆழம் குறைவாக இருந்தமையாலும் இலகுவில் மனிதர் கடல் கடந்து இலங்கைக்குத் தொடர்ந்து வர முடிந்தது.

துணைக்கண்டத்தின் தென் பகுதியில் பல பழைய கற்காலத் தலங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இதனால் பல்லாயிரம் ஆண்டுகளாக இப் பகுதியில் மனிதர் வாழ்ந்தனர் என்பது உறுதியாகின்றது. பழைய கற்காலக் கருவிகள் காணப்படும் இடங்கள் தென்னிந்தியாவின் மாநிலங்கள் அனைத்திலும் உள்ளன.

பேராசிரியர்
கா. இந்திரபாலா

ஆந்திரப் பிரதேசத்தின் எல்லா மாவட்டங்களிலும் பழைய கற்காலக் கருவிகள் பெறப் பட்டுள்ளன. கர்நாடக மாநிலத்திலும் இத்தகைய கருவிகள் கிடைத்துள்ளன. ஆனால் தமிழ்நாட்டில் பழைய கற்காலக் கருவிகள் பெரும் அளவிலோ, பரவலாகவோ கிடைக்கவில்லை. இக் கருவிகள் கிடைத்த ஒரு முக்கிய இடம் அந்திரம்பாக்கம் ஆகும். அண்மைக்காலத்தில் புதிதாகச் சில பழைய கற்காலக் கருவிகள் வேறிடங்களிலும் கண்டு பிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், தமிழ்நாட்டில் பழைய கற்காலம் பற்றிய ஆய்வு மேலும் நடத்தப்பட்ட பின்னரே திட்டவட்டமான தகவல்களைப் பெறக் கூடியதாய் இருக்கும். (தொடரு ம்)

# விசேட கல்வி நடைமுறையும் யாழ். கல்வி வலய செயற்பாடுகளும் 2

யாழ்ப்பாணக் கல்வி வலய விசேட கல்விச் செயற்பாடுகளாக ஆசிரியர்களுக்கான செயலமர்வு, மாணவர்களுக்கான சிறுவர் முகாம், அதிபர்களுக்கான விழிப்பூட்டல் செயலமர்வு, பாடசாலைகளில் மருத்துவ பரிசோதனை, பெற்றோருக்கான விழிப்புணர்வுச் செயலமர்வு, உலக வலுவிழந்தோர் தினத்தை முன்னிட்டு போட்டிகள் நடாத்துதல், வலுவிழந்தோர் வாரம் அனுஷ்டித்தல், வலுவிழந்தோர் தினம் கொண்டாடுதல், விசேட உபகரணங்கள் கற்றல் உபகரணங்கள் வழங்குதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இச் செயற்பாடுகள் கடந்த காலங்களிலும் செயற்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவ்வருடம் சுற்றுலா, கண்காட்சி ஆகிய இரண்டு புதிய செயற் திட்டங்களும் செயற்படுத்தப்பட்டுள்ளன

### *1. மருத்துவப் பரிசோதனை*

கடந்த வருடம் ஹரித்தாஸ்–கியூடெக் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். போதனா வைத்தியசாலை சமூக தொழில் வழி சிகிச்சையாளரால் ஆரம்பிக்கப்பட்ட மருத்துவ பரிசோதனை இவ்வருடம் "CHA" நிறுவனத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டது. மாதம் தோறும் 3 செவ்வாய்க்கிழமைகளில் பாடசாலைகளுக்கு நேரடியாகச் சென்று மருத்துவ பரிசோதனை நடாத்தப்படுவதோடு பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. இவ்வருடம் 26 பாடசாலைகளில் பரிசோதனைகள் நடாத்தப்பட்டு 225 மாணவர்கள் விசேட தேவையுடைய மாணவர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களில் 40 மாணவர்கள் மேலதிக சிகிச்சையின் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு பரிந்துரை செய்யப்பட்டு தொடர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

### செயலமர்வு

ஆசிரிய ஆலோசகருடன் பயிற்சிபெற்ற விசேட கல்வி வளவாளர்களும் இணைந்து பல செயலமர்வுகளை ஆசிரியர்களுக்கு நடாத்தியுள்ளனர்.

மாகாணக் கல்வித் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற "ESDFP" செயற்றிட்டத்தின் கீழ் ஆரம்ப, இடைநிலைக் கல்வி ஆசிரியர்களுக்கு 07 செயலமர்வுகளும் அதிபர்களுக்கு 01 செயலமர்வும் 'CHA' நிறுவனத்தின் அனுசரணையுடன் 04 செயலமர்வுகளும் 'நிக்கொட்' செயற் திட்டத்தின் கீழ் 05 நாட்கள் கொண்ட செயலமர்வுகளும் நடாத்தப்பட்டுள்ளன.





இச் செயலமர்வுகள் மூலம் இவ் வருடம் 426 ஆசிரியர்களும் 96 அதிபர்களும் விசேட கல்வி தொடர்பான அடிப்படை அறிவையும் கற்பித்தல் நுட்பங்களையும் அறிந்துள்ளனர். 'நிக்கொட்' செயற் திட்டத்தின் கீழ் நடாத்தப்பட்ட செயலமர்வின் மூலம் 50 ஆசிரியர்கள் பார்வையற்ற மாணவர்களுக்கான பிறெயில்மொழி மற்றும் அபாக்கஸ் மூலமான அடிப்படைக் கணித எண்ணக் கருவை கற்பிக்கும் முறையையும் செவிப் புலனற்ற மாணவர்களுக்கான சைகை மொழியையும் கற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சிறுவர் முகாம்

விசேட கல்வித் தேவையுடைய மாணவர்களின் பண்புசார் விருத்திகள், நாளாந்தப் பழக்கவழக்கங்கள், பிறருடன் கூடிப் பழகும் தன்மை, தலைமைத்துவப் பண்பு, சிந்தனா சக்தி, செயற்றிறன், உத்வேகம், துரித செயற்பாடு, அங்கங்களின் திறன் விருத்தி, மகிழ்ச்சி என்பவற்றை மேம்படுத்தும் முகமாக பல சிறுவர் முகாம்கள் நடாத்தப்பட்டுள்ளன. அந்த வகையில் 'ESDFP' செயற்றிட்டத்தின் கீழ் 05 சிறுவர் முகாம்களும் 'CHA' இன் அனுசரணையுடன் 04 முகாம்களும் நடாத்தப்பட்டுள்ன. இம் முகாம்களில் 388 விசேட தேவையுடைய மாணவர்கள் பங்குபற்றிப் பயனடைந்துள்ளனர். இச் செயற்பாடுகளில் மாணவர்களுடன் பெற்றோர்களும் இணைந்து பங்குபற்றிப் பயனடைந்துள்ளனர்.

### பெற்றோருக்கான விழிப்புணர்வு


விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கருத்தரங்குகள், நாடகங்கள் என்பனவும் நடாத்தப்பட்டுள்ளன. அந்தவகையில் 'ESDFP' செயற்றிட்டத்தின் கீழ் 04 விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும் 'CHA' நிறுவனத்தின் அனுசரணையுட்ன 04 கருத்தரங்குகளும் நடாத்தப்பட்டுள்ளன. இக் கருத்தரங்குகளில் 323 பெற்றோர்கள் பங்குபற்றியுள்ளமையால், அவர்களிடையே தமது பிள்ளைகளும் இவ்வுலகில் வாழ முடியும் என்ற நம்பிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி தமது பிள்ளைகளை பாடசாலைகளுக்கு ஒழுங்காக அனுப்புகின்றமை, பிள்ளைகளின் செயற்பாடுகள், முன்னேற்றம் தொடர்பாக அதிபர், ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர் ஆகியோரைச் சந்தித்து உரையாடி ஆலோசனைகளைப் பெறுகின்றமை என்பன விசேட கல்விப் பிரிவுக்கு கிடைத்த பெரு வெற்றி எனக் கொள்ளலாம்.

செல்வி. சந்திரிகா நவரத்தினம்
ஆசிரிய ஆலோசகர் (விசேட கல்வி)
யாழ் கல்வி வலயம்

மேலும் சிறுவர் செயற்திட்டத்தின் கீழ் 'காலமும் கனியும்' என்ற உட்படுத்தல் கல்வியை மையமாகக் கொண்ட நாடகம் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் மேடையேற்றப்பட்டது. இந்நாடகத்தை விசேட கல்விப் பிரிவுடன் ஊரெழு கணேச வித்தியாசாலையில் நாடக வட்டமும் இணைந்து மேடையேற்றியமை பாராட்டத்தக்க விடயமாகும். (தொடரும்)

# நத்தார் சிறப்பு மலர்-25.12.2008

## பாலன் இயேசுவின் ஆசீர் அனைவருக்கும் கிடைக்கட்டும்



இறைமகன் இயேசுவின் மனித பிறப்பை வருடாவருடம் நத்தார் பண்டிகையில் அனைத்து கிறிஸ்தவ மக்களும் கொண்டாடுகின்றனர். இவ் மகிழ்ச்சியான பிறப்பை ஏனைய மதத்தினர் கூட உவப்புடனும் மகிழ்வுடனும் நினைவு கூருகின்றனர்.

அடக்குமுறைகளும் வல்லரசுகளின் ஆதிக்கமும் மக்களை அடிமைகளாக்கி மனித மாண்பு மறுக்கப்பட்ட வேளையிலே பலஸ்தீனாவிலே *பெத்தலகேம்* எனும் ஊரிலே மரியாள்-சூசை பெற்றோருக்கு இறைமகனாக பிறந்தார் இயேசு பாலன்.

இயேசுவின் பிறப்பின் இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்தும் மனித வரலாறானது துன்பியல் கதையாகவே இருக்கின்றது. மனித உரிமை மீறல்களும், வன்செயல்களும் மலிந்து மனித மாண்பை அச்சுறுத்துகின்ற வேளையில் இயேசுவின் பிறப்பு இன்று பல கேள்விகளை எழுப்பி நிற்கின்றது.

குறிப்பாக வன்னியில் வாழும் மூன்று இலட்சத்துக்கு அதிகமான மக்கள் போரினாலும், தொடர்ந்து நடைபெறும் இடப்பெயர்வினாலும், மழை வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்களினாலும் வெகுவாகப் பாதிக்கப்பட்டு துன்புறுகின்றனர். இத்துன்பங்களைக்கண்டும் வெளிநாடுகள் மௌனம் காப்பது மிகவும் கவலைக்குரியது.


கேட்பதற்கு யாரும் அற்ற ஏதிலிகளாக அழுவதற்கு கண்ணீரும் ஓலமிட குரலும் அற்றவர்களாக இருக்கும் எம் மக்களுக்கு பாலன் இயேசுவின் பிறப்பு, வானதூதர் கூறிய ***"உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக! "*** (லூக்.2:13-14) என்ற அமைதியின் செய்தி மீள்நம்பிக்கையை கொடுக்கின்றது.

நத்தார் பண்டிகை குடும்பங்களின் பண்டிகை; பெற்றோர் பிள்ளைகளுடன் கூடி மகிழ்ந்து அன்புறவில் வளர்ந்து நிறைவு காணும் வேளையாகும். எனவே இம் மகிழ்ச்சியான காலத்தில் பாலன் இயேசுவின் ஆசீர் அனைத்து குடும்பங்களுக்கும் எம் நாட்டுக்கும், நல்ல மனமுள்ள அனைவருக்கும் கிடைக்க ஆசிக்கின்றேன்.

அமைதியும் நீதியும் இழந்துள்ள எம் இலங்கை தீவுக்கு நாம் ஆசித்து தேடும் நிலையான நீதியோடு கூடிய அமைதி இப் புத்தாண்டில் மலர ஆசித்து நல்வாழ்த்துக்களைக் கூறி நிற்கின்றேன்.

**அதி. வண. தோமஸ் சவுந்தரநாயகம்**
**யாழ். ஆயர்**

## குழந்தை இயேசுவின் வருகை நொருங்கிய இதயங்களை குணமாக்கும் ஔடதம்



குழந்தை இயேசுவைப் பெற்றோர் பிரதிஷ்டைக்காக எருசலேம் தேவாலயத்திற்கு எடுத்துச் சென்றனர். தேவாலயத்தில் இரண்டு பக்தர்கள் இருந்தனர். அவர்கள் வயோதிபர். தேவாலயத்திலே உபவாசத்திலும் பிரார்த்தனையிலும் தமது காலத்தைக் கழித்தவர்கள். ஒருவர் சிமியோன். மற்றவர் அன்னாள் என்ற மூதாட்டி.

இஸ்ரவேல் நாடு, சீரழிந்தும் சிறுமைப்பட்டும் போயிருந்தாலும், இவ்விரு முதியவர்கள் இஸ்ரவேலரின் பண்டைய பெருமையை மறந்துவிடவில்லை. மாமன்னர் டேவிட் அரசாண்ட காலம். திரும்ப வரும் என்று திடமாக நம்பியிருந்தார்கள். இன்றைய சலசலப்புகள் இறைவன் அருளால் நீங்குவதன்றி நிலைக்காது என்று கலங்காது இருந்தனர்.

இதனாலேதான் சிமியோன் குழந்தை இயேசுவைத் தமது கரத்தில் வாங்கி இறைவா நீர் ஏற்படுத்திய இரட்சண்யத்தை எனது கண்கள் கண்டன என்றார்.

அன்னாள் ''இறுதியில் நாம் எதிர்பார்த்த இரட்சகர் வந்துவிட்டார்'' என்று சகலருக்கும் கூறினார்.

பண்டைக்காலத்தைப் பற்றிய உயர்வான எண்ணம் அது திரும்ப வரும் என்ற காத்திருப்பு, அதற்காக உபவாசம், பிரார்த்தனை குழந்தை இயேசுவின் வருகை நொருங்கிய இதயங்களை குணமாக்கும் ஔடதம்.

**எஸ்.ஜெபநேசன்**
***(முன்னாள் ஆயர் தென்னிந்திய திருச்சபை)***

## "அருளாசி பொழிந்திடுவாய்"

தொடர்கின்ற போருக்கும் முடிவில்லா வேதனைக்கும்
இடையினிலே வருகிறது மீண்டுமொரு நத்தார்
மகிழ்வுடனும் நிறைவுடனும் கொண்டாட நினைக்கின்றோம்
கரத்தினிலே தனமில்லை மனதினிலே இடமில்லை

எளிமையாய் பிறந்தவனே யேசுவே பாலகனே
எம்மீது நீர் இரங்கி ஏழ்மையை நீக்குமையா
மாடடைக் குடிலினிலே இறைமகனாய் பிறந்தவனே
துயர்களைக் களைகின்ற நன்மனது தந்திடுவாய்

எம்வாழ்வில் சோகங்கள் தொடராக வருகுதையா
அனைத்தையும் நீக்கிவிடு மகிழ்வாகும் உன்பிறப்பு
தூயமரி மடியினிலே புன்முறுவல் பூத்தவனே
அமைதியுடன் நாம்வாழ அருளாசி பொழிந்திடுவாய்

*இ.அ.அமலரட்ணம் ,யாழ்ப்பாணம்*



## தேவனின் பிறப்பு தருமொரு சிறப்பு

கார்த்திகை மறைந்தது மார்கழி மலர்ந்தது
கருமேகம் குளிர்ந்தது மழையுமோ பொழிந்தது
வேர்களும் ஆழமாய் நிலத்தினில் ஊன்றின
விளைபயிர் மொட்டுகள் விளைவின்றி உதிர்ந்தன
தீர்வினை தேடியே தேசமும் துடித்தது
தேவனின் பிறப்பொடு நடுவிருள் விடிந்தது
சீர்தனை பெற்றிடும் காலமும் கனிந்தது
செகத்தினில் கண்களும் மகிழ்வொடு பனித்தன.

அல்வையூர்
கே. ஆர். திருத்துவராஜா

## இயேசுபிரான் வந்துதித்தார்

தேசுடன் பிறந்தார் தேவனும் தொழுவமதில்
தேசங்கள் யாவிலும் நிறைந்தார் இதயங்களில்
இயேசுவின் நாமத்தால் அகன்றன நோய்பிணிகள்
இயேசுவின் சிலுவையால் போயின பாவங்கள்

நேசத்தால் போதித்து ஏழைகள் துயரகற்றி
நீதியின் வழிவென்றிட இன்னல்கள் சுமந்தேகினார்
நீசர்கள் கொடுமைகளை அன்பினாலே வென்றபிரான்
நீண்டு வரும் அவலங்களை தீர்க்க வாரும் இயேசுபிரானே!

கவிஞர் வதிரி கண.எதிர்வீரசிங்கம்

## மீண்டும் நீ வரவேண்டும்

யேசு பாலனே – நீ
உன் அன்னை
மடியிலே அவதரித்து
ஈராயிரம் ஆண்டுகள்
உருண்டோடி விட்டது
அதர்மந்தனை அழித்து
தர்மத்தை நிலை நாட்டிவிட்டு
சென்ற யேசு கிறிஸ்துவே !
மீண்டும் இப்பூமியிலே
அதர்மம் தலைவிரித்து
தாண்டவம் ஆடுகிறது
இத்துயர் தனைப் போக்க
இத்திருநாளிலே
மீண்டும் நீ வரவேண்டும் !
எமக்கெல்லாம்
விடிவொன்று தரவேண்டும் !

*வல்வைச்சுமன்*
*யாழ். சிதம்பரக் கல்லூரி*

## உண்மையமைதி தாருமையா!

போரின் கரங்கள் சூழ்ந்தெமை வாட்ட
கோரப் பிடிக்குள் சிக்கித் தவிக்கின்றோம்
நேரக் கணக்கின்றி வெயிலில் நின்றுமே
எங்கள் நிம்மதியைத் தொலைத்து வாழ்கின்றோம்
வாரக் கணக்காய் அலைந்து அலைந்து
பல வாரத்தின் பின்னே பயணம் செல்கின்றோம்
யாரிடம் எம்குறை சொல்லி அழுவோம்
போரிடர் தீர்ந்திடப் பிறந்திடும் இயேசுபாலனே !

காரிருள் நிறைந்த வேளையும் பயங்கரம்
கண்மூடும் முன்னே ஷெல்வான் தாக்குதல்கள்
மாரிமழை வெள்ளம் புயற்காற்றின் மத்தியிலும்
போரின் கெடுபிடிகள் நெஞ்சம் பதறுதையா
இருந்திட இடமுமின்றி மாற்றிட உடையுமின்றி
அன்னம் தண்ணியின்றி அகதியாய் அலைகிறோம்
அமைதியின் வேந்தனாய் அவதரித்த பாலனே
உம்பாதம் தொழுகின்றோம் உண்மையமைதி தாருமையா !

*–அபிர்ராஜன்–*

## இறைவனின் மானுட அவதாரமே ஆண்டவர் இயேசுவின் பிறப்பு



ஆளுமையான அன்பர்களே சகோதரர்களே மீளவும் நாம் யாவரும் ஒரு கிறிஸ்மஸ் காலத்திற்குள் வருகின்றோம். உங்களை வாழ்த்துவதில் பெரும்மகிழ்வடைகின்றேன். பல்வேறு வகையில் எம்மவர்கள் சொல்லொணா வேதனையை அனுபவித்து வரும் இன்றைய சூழமைவில் மறுபடியும் ஆண்டவர் இயேசுவின் பிறப்பை மனங்கொள்ளவும், அந்தப் பிறப்பினால் உலகமனைத்துக்கும் கிட்டியதும் இன்றும் கிடைப்பதுமான நிறைவை உணர்ந்தவர்களாக இறைவனுக்கு நன்றி சொல்லவும் நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

டீயற்ரிச் பொன்ஹோபர் (Dietrich Bonheoffer) என்ற இறைபக்தன் சிறையிலிருந்து வரைந்திட்ட தனது கடிதங்களுக்கூடாகவும், பத்திரங்களுக்கூடாகவும் இறைவனது பிரசன்னத்தின் உறுதியை எச் சூழ்நிலையிலும் மானுடம் அனுபவிக்கலாம் எனும் பேருண்மையைக் கூறியுள்ளார்.

அவற்றின் தொகுப்பாகிய "Letter and papers from prison நூலில் இவ்வாறு குறிப்பிடுகின்றார். "God is weak and powerless in the world, and that is exactly the way, the only way, in which he can be with us and help us" "இறைவன் உலகத்தில் பலவீனமாகவும், வல்லமையற்றவராகவும் இருக்கின்றார். இதுவே அவர் எம்முடனிருந்து எமக்கு உதவி செய்யக் கூடியதான ஒரே வழி"

இறைவன் மானுடவதாரம் எடுத்திட்ட செயல் அவர் மானுடர் மத்தியில் வசிக்க வந்திட்ட நிகழ்வாகும். மானுட துன்ப துயரங்களில் பங்கெடுத்து மானுடத் தின் அன்றாட அனுபவங்களில் தோளோடு தோள் நிற்கின்ற செயல்பாடே அது. அன்று இஸ்ராயேல் மக்கள் துன்ப சாகரத்தில் மூழ்கியோராய் எழுப்பிய கதறலின் குரலை இறைவன் அறிந்தவராய் அவர்களை விடுவிக்க இறங்கிவந்தார். அந்த இறங்குதல் உண்மையிலே மானுடவதார நிகழ்வே. இதனையே ஆண்டவர் இயேசுவின் பிறப்பிலும் நாம் காண்கிறோம். இது தெய்வீகத்தின் மாபெரும் ஒப்படைப்பன்றோ!

மானுடத்துக்கான இறை ஒப்படைப்பு முழுமை பெறுவதற்கு மானுடம் பதிலுரை செய்வது அவசியம். அது மானுடம் தன்னையே மறுபடியும் இறைவனுக்கு ஒப்புக்கொடுப்பது மாத்திரமல்ல. தனது சக மானுடத்துடன் ஒன்றிப்பதுமாகும். ஆதலால் இன்று ஆண்டவரின் பிறப்பின் தாற்பரியத்தை தகுந்தவகையில் உள்வாங்குவதற்கு இறைச் சாயலில் படைக்கப்பட்ட சகமானுடம் அச்சாயலை இழந்து போகாது இருக்கும்படி உழைப்பது அவசியமாகின்றது. இந்த நாட்களில் எங்களது ஆடம்பர செலவுகளைத் தவிர்ப்போம். துன்பப்படும் மனுக் குலத்தின் வேதனையில் பங்குபெறுவோம் வாருங்கள் என்று அழைக்கின்றேன்.

உங்கள் யாவரோடு ஆண்டவரின் ஆசீர்வாதம் உங்களுடனே கூட இருக்கவேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

**அதிவண. கலாநிதி. டானியல்.எஸ். தியாகராஜா**
***(பேராயர் தென்னிந்திய திருச்சபை***
***அமெரிக்கன் இலங்கை மிஷன்.)***

## நம்பிக்கை ஒளி ஏற்றுவோம்

அஞ்சாதீர் எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன். இன்று ஆண்டவராகிய மெசியா எனும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்.குழந்தையை துணிகளால் சுற்றி தீவனத்தொட்டியில் கிடத்தி இருப்பதைக் காண்பீர்கள்.

வயல்வெளியில் ஆடு மேய்க்கும் இடையர்களுக்கு வானதூதரால் கூறப்பட்ட நற்செய்தியை பாமரமக்களான இடையர்கள் நம்பிக்கையோடு தேடினார்கள். மாடடைக்குடிலில் மனுமகன் இயேசுபாலனின் பிறப்பைக் கண்டு மகிழ்ந்து கொண்டாடி ஊருக்கெல்லாம் அறிவித்தார்கள். இன்று வரை உலகமே அந்த வாரத்தை மகிழ்வுடன் நம்பிக்கையோடு கொண்டாடி மகிழ்கிறார்கள்.

எங்கே பிறப்பார்? எப்படிப் பிறப்பார்? யாருக்கு விடுதலை? யாருக்கு கலக்கம் என்பதனை அன்றைய பிறப்பின் செய்திகளை இன்றும் மீட்டுப் பார்க்கிறோம். மிகவும் துன்புறும் சூழலில் சூசையும் மரியாளும் சொந்த மண்ணிலே அகதியாக தங்கி வாழ வழியின்றி சத்திரத்திலும் இடமில்லை என அலைந்தவர்கள் மாடடைக்குடிலில் மனுமகன் யேசுபாலனைப் பெற்றெடுத்த நாள் கிறிஸ்மஸ் திருநாளாக உலகமே கொண்டாடுகிறது. இருள் அகற்ற வந்த ஒளியின் பிறப்புகள் ஒளிவிழாவாக பாலர் முதல் பாமரர் குபேரர் வரை குதூகலித்து கொண்டாடி மகிழ்கின்றனர்.

எமக்கொரு மீட்பர் பிறந்துள்ளார் என்ற நம்பிக்கை ஒளியின் பிறப்பை பல துன்பத்தின் மத்தியில் அன்று அறிந்தவர்கள் போல் இன்றும் சிறுவர்கள் குதூகலத்துடன் தங்களின் கலையுணர்வுடன் அன்புப் பகிர்வுடன் ஆனந்தமாகக் கொண்டாடி மகிழ இன்றைய சூழலும் சுற்றமும் பல நெருக்கீடுகளை கட்டவிழ்த்து விட்ட வண்ணமே உள்ளன. இதன் மத்தியில் இன்று பிறந்துள்ளார் எம் மத்தியில் பாலயேசு என்ற நம்பிக்கை ஒளிவிழாக்களை கொண்டாடி மகிழ்கின்றனர். கிறிஸ்துப்பாலனின் பிறப்புக்கு களங்கம் கற்பிப்போர் குழம்பலாம், குழப்பலாம்,கலங்கலாம், ஏரோது மன்னன் அன்று கலங்கினான், குழம்பினான், நீதியற்ற பதவி வெறிபிடித்து பாவி இயேசுவின் சாயல்களான பச்சிளம் பாலகர்களைக் கொன்று குவித்தான். கிறிஸ்து பிறப்பு அவர்களுக்கு துன்பமானது இன்றும் எம் மக்கள் கலகத்தின், குழப்பத்தின் மத்தியில் பாலயேசுவின் பிறப்பை நம்பிக்கை ஒளிக்கீறாக எண்ணி மகிழ்கிறார்கள்.

துன்புறும் மனங்களின் துயர் தீர்க்க பிறந்துள்ளார் என்ற நம்பிக்கையுடன் ஆன்மீக தேடலுடன் உறவை வளர்க்க உண்மை நிலைக்க பிறந்த பாலனின் துன்பங்கள் போல் துவண்டு வாழும் மக்களின் நிலைகளை மாற்றி புதுவாழ்வு புலர ஒன்றுகூடி ஒளியேற்றும் விழாக்களைக் கொண்டாடுவதில் அன்பைப் பகிர்ந்து ஆன்மீக ஒளியைத் தேடி அல்லலுறும் இதயங்களில் நம்பிக்கை ஒளி பிறக்க பிரார்த்தனைகளோடு பிறரன்பு பணிகளாலும் இணைந்து மகிழும் நாளாக நத்தார் பிறந்துள்ளது. நம்பிக்கை ஒளி பிறந்துள்ளது. நாம் ஏரோதுக்களிடமிருந்து பாலன்களைக் காப்பதும் மூவிராசாக்களாக அன்புப் பகிர்வை பரிசாக்குவோம். நம்பிக்கை ஒளியை ஏற்றுவதன் கருவிகளாக மாறுவோம்.

நல்லுறவால், நற்பணிகளால் நத்தார் வாழ்த்துக்கள் கூறி மகிழ்வோம்.

***நத்தார் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்.***

**செ.யோசப்பாலா**
**கத்தோலிக்க சபை - இலக்கிய வட்டம்.**

# வாகனப்பதிவு சான்றிதழ்கள், வாகனப் பரிசோதனை கடிதங்கள்

# உரியவர்களின் விலாசங்களிற்கு சென்றடையாதவை

# ஒரு தொகுதி யாழ். அலுவலகத்திற்கு கிடைத்துள்ளன

## மோட்டார் போக்குவரத்து திணைக்கள உதவி ஆணையாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் கொழும்பு அலுவலகத்தில் இருந்து பதிவுத்தபால் மூலம் வாகனப்பதிவுச் சான்றிதழ் மற்றும் உடமைமாற்றும் தொடர்பான வாகன பரிசோதனைக்கடிதங்கள் என்பன வாகன உடமையாளர்களுக்கு அனுப்பப்பட்டிருந் தன.

உரியவர்கள் குறித்த முகவரியில் இல்லாத காரணத்தினால் தபாலில் விநியோகம் செய்யப்படாத வாகனப் பதிவுச் சான்றிதழ் மற்றும் வாகன பரிசோதனைக் கடிதங்கள் யாழ். மாவட்ட போக்குவரத்து அலுவலகத்தில் கிடைக்கப் பெற்றுள்ளன.

எனவே,உரியவர்கள் தமது தேசிய அடையாள அட்டை மற்றும் வாகன ஆவணங்களுடன் அலுவலக நாட்களில் நேரில் வந்து வாகனப் பதிவுச் சான்றிதழ் மற்றும் வாகன பரிசோதனைக் கடிதங்கள் ஆகியவற்றை பெற்றுக்கொள்ளலாம் என யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் அறிவித்துள்ளார்.

(NPGG-9846)எஸ்.எஸ்.ஜெயசீலன்-நவாலி கிழக்கு,(NPHV-5138)எஸ்.சிவ பாதசுந்தரம்-உரும்பிராய் மேற்கு,(NPHW-2181) எஸ்.சதீசன்-சுதுமலை வடக்கு,(40-1692)எம். பிரான்ஸிஸ் -யாழ்ப்பாணம்,(206-5983) எஸ்.சிவ ரூபன்- கரவெட்டி வடக்கு,(NPHI-9543)எஸ்.சுதா கர் -உரும்பிராய் மேற்கு, (NPHI-0896) எம்.ஞானகரன்- கொக்குவில் மேற்கு , (NPGI-3462)எஸ்.கே. கந்தசாமி - ஜயனார் கோவில் அருகாமை ,சுன்னாகம், (41-2479 )என்.சுகந் தாஸ் -புன்னாலைக் கட்டு வான்,(7-7324)வி.ஜி. நரயன் -சங் கானை மேற்கு, (41-6015)ஜி.பாஸ்கரன் - நாவலடி, அரியாலை, (3-6593) எஸ்.சுப்பிரமணியம் -இடைக்காடு, (NPME-2397)ரி.தயாபரன் -விநாயகர் வீதி நல்லூர் வடக்கு, (NPGR-2096) வி.ஜெய வதனி -புன்னாலைக் கட்டுவன் தெற்கு, (NPME-0210)ஜெ.டி.டில்றுக் சன் -(466) நாவலர் வீதி, (3-4898) ஆர்.யோகமலர் - கலைமணி லேன், கட்டைப்பிராய், (124-7736) எஸ்.சீனிவாசகம்-கிருஸ்ணா ஸ்ரோஸ் வசா விளான், (149-5531) பி.தெய் வேந்திரம் உரும் பிராய் கிழக்கு,(28-9315) எ.ஆர்.அன்னசோதி - அத்தியடி யாழ்ப்பாணம், (NPJI-3017) எஸ்.சிவ சங்கர்-சங்கத்தானை வீதி சாவகச்சேரி, (6-1538) எஸ்.சுந்தரம் -கொக்குவில் மேற்கு, (96-7612)சி.தினகரன்-சாரசாலை வடக்கு, NPJK-8881)எஸ்.ராகுசன்- அச்சுவேலி வடக்கு, (56-9208) என்.சிறிகாந்தராசா-வசாவிளான், (92-9547) ரி.சின்னராஜா- இணுவில்,(25-3074) எஸ். திருச்செல்வம் -பண்ணாகம், (25-8979), எ.குமாரசாமி -ஊர்காவற்றுறை, (NPJY-6771)வி.பாலசிங்கம் -யாழ்ப்பாணம், (202-5594), எஸ்.சிவரூபன்-வசாவிளான், (203-6357) ,எஸ்.சக்திதாசன் -மிருசு வில்,(61-6413), எச்.புஸ்பகாந்தி- பறளாய் வீதி,சுழிபுரம் கிழக்கு,

(NP GS - 6587) தம்பு தேவராஜா - கஸ் தூரியார் வீதி, யாழ்ப்பாணம், (5_9890) செல் லன் செல்வராசா - தொல்புரம் மேற்கு, (149 - 5091) வேலாயுதபிள்ளை நித்தியானந்தசிவம் - 83, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி, (NPGH - 6008) இராசையா மகேஸ்வரன் - பத்தைமேனி, அச்சுவேலி, (NP GS - 6617) சிவசுப் பிரமணியம்கோபிநாத்-புத்தூர்வடக்கு,(141 - 0522) மேகிபராஜ் செல்லையா - கச்சாய் வீதி, சாவகச்சேரி, (121-2949) சகாநாயகம் இராஜ நாயகம் கன்ஸ்பார் - இல. 159, புதிய செட்டித் தெரு, கொழும்பு - 13, (113-4714) சிவசாமி கிருபாகரன் - இல. 165, பிரதான வீதி, திருகோணமலை, (112 - 5926)திருமதி. கணே சமூர்த்தி சரஸ்வதி - இணுவில் மேற்கு, (92 SRI 1596) கருணாகரன் மகாரத்தினம் - வர்த்தளவிளான் தெல்லிப்பளை, (84-4463) இராசதுரை சண்முகம்பிள்ளை - இல. 30, ஸ்ரோபறி ஹறாடின், கொழும்பு - 04, (NP HF - 8875) பாலசுந்தரம் அஜந்தன் - கொக்குவில் கிழக்கு, (86 - 4515) தர்மநாதன் பேரம்பலம் - ஏழாலை மேற்கு, (54-1022) சற்குனானந்தா சிறிஸ்கந்தராஜா - குரும்பசிட்டி, தெல்லிப்பளை, (26 SRI 1098) கந்தையா யோகநாதன் - ஆவரங்கால் மேற்கு, (9-6961) சுப்பையா ஸ்ரீனிவாசன் - உரும்பிராய் மேற்கு, (500 - 9889) சந்திரசேகரம் இளங்குமரன் - அம்மன் வீதி, திருநெல்வேலி, (500 -9984) தம்பித்துரை ராஜதுரை - கனகபுரம், கிளிநொச்சி, (500 - 9340 ) மானுவேற்பிள்ளை சார்ள்ஸ் விஜயன் - இல. 08, பூங்கா வீதி, குருநகர், (500 - 9809) கதிரவேலு தெய்சீஸ்வரராசன் - கந்தர்மடம், நல்லூர்.

(500 - 9791) இராமகிருஸ்ணன் பிரபா கரன் - ஜெயந்திநகர், கிளிநொச்சி, (500 - 9728) சீவரத்தினம் சுதர்சன் - குமாரசாமி லேன், கந்தர்மடம், (500-9706) பாலசிங்கம் நடனராசா - கட்டுவன் மேற்கு, (500 - 8264) சுப்பிரமணியம் ஞானமூர்த்தி - பலாலி வீதி, திருநெல்வேலி, (500-7670) கந்தையா பாலச்சந்திரன் - பொலிஸ் நிலையம் அருகில், சுன்னாகம், (500 - 7339) சீனியன் குண பாலன் - மயிலிட்டி தெற்கு, (500 - 7242) சின்னத்துரை சிவகுமார் - சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய், (500 - 6855) கனகரத்தினம் சாம்பசிவம் - மருதங்கேணி வீதி, புலோலி வடகிழக்கு, (500 - 6644) ரவி பொன்னையா - காந்தியூர், புலோலி வடமேற்கு, (500 - 0731) இராஜேந்திரம் தவராஜா - கரணவாய் தெற்கு, கரவெட்டி, (500-1569) பாலசுப்பிரமணியம் பொன்னம்பலம்-கோண்டாவில் மேற்கு, (500 - 2697) மகாலிங்கம் சிவானந்தராஜா - சபாபதிப் பிள்ளை வீதி, சுன்னாகம், (500 - 2872) மந்திரி தங்கவேலு - இருபாலை கிழக்கு, (500 - 3066) விசுவலிங்கம் சச்சிதானந்தராஜா - நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி, (500 - 3108) கந்தையா சிவபாதம் - இல. 368 (254), கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம், (500 - 3467) யோக ராஜா செபமாலை செக்ரஸ் - கென்ஸ்மன்லேன், சாவகச்சேரி, (500-3925) தர்மகுலசிங்கம் கதிரன் - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், 88 (SRI 8042) நாகமணி பாலசிங்கம் - நவக்கிரி, புத்தூர், (500-3935) பிரான்சிஸ் சிறில் அன்ரனி - கடற்கரை வீதி, குருநகர், (500 - 3681) பாலசுப்பிரமண்ியம் பாலகிருஸ்ணன் - சுதுமலை வடக்கு, (500-3754) ஜயாத்துரை பொன்னன்-மட்டுவில்மேற்கு, (500 - 3865) வேணட் அல்பிரட் புனிதா -3ம் குறுக்குத்தெரு,பருத்தித் துறை,

(500 - 5494) நாகமுத்து யோகராஜா - இமையாணன், கரவெட்டி, (500-5602) சிவசம்பு இரத்தினம் - இத்தாவில், பளை, (500 - 5807) பவிலுப்பிள்ளை தேவதாசன் - பிரதான வீதி, யாழ்ப்பாணம், (EN - 9175) விநாயகமூர்த்தி சிறிதரன் - சுழிபுரம் வடக்கு, (CN - 6645) சின்னப்பன் அமிர்தலிங்கம் மின்சார நிலைய விடுதி, சுன்னாகம் தெற்கு, (500 -5421) அந்தோனிப்பிள்ளை தவதாஸ் - புலோலி வடகிழக்கு, (500 - 3827) இரவிக்குமார் தியாகராஜா - இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம்.


தேவமைந்தன் தோன்றி தேவகிருபையை யாவருக்கும் அளித்திட நாம் பிரார்த்திக்கின்றோம்.

BOC PRESTIGE PLUS -SPECIAL CURRENT ACCOUNT

'BOC Prestige Plus' Personal Current Account, exclusively designed for demanding professionals and busy executives of today's World , offers a host of convenient features and benefits to suit their life-style.

BOC Prestige PLUS Personal Account

Exclusively for you
- If you are a professional, employed or engaged in private practice OR
- If you are an executive in a reputed private organization or a public servant with monthly gross earnings exceeding Rs.40,000/=

You can open a BOC Prestige Plus Personal Current Account and enjoy all the under mentioned privileges.

- Specially designed personal cheque book with the name of the account holder imprinted on the cheque leaves.
- Facility for SMS and Internet Banking.
- Enhanced daily withdrawal limit of Rs. 100,000/= on Visa Electron Debit Card.
- Credit Cards are issued without joining fee, with a minimum credit limit of Rs.100,000/=
- Personal loan, housing loan and leasing facilities can be considered even for new customers without the 6 months rule.
- Life Insurance policy of Rs.5,000,000/= From Ceylinco Insuranc Company Ltd.
- Air tickets can be purchased at BOC Travels (Pvt.) Ltd. at very special rates.

TAP YOUR POTENTIAL
REACH YOUR DREAMS



WITH A BOC PRESTIGE PLUS PERSONAL CURRENT ACCOUNT AT YOUR SIDE

BANK OF CEYLON
BOC
Bankers to the Nation

# ஊழிக்காலப் பேரழிவை உணர்த்தும் கடும் மழை—பெரும் புயல் 'நிஷா'

16


# இயற்கையின் சீற்றத்தில் இறைவனின் அற்புதம்

என்.விஜயன்

இயற்கையின் அனர்த்தங்கள் நடக்கும் போது அதிசயமான நிகழ்வுகளும் நடந்து விடுகின்றன. இதனாலேயே இறைவன் பற்றிய நம்பிக்கை வலுவடைகின்றது.

அமெரிக்காவில் இரட்டைக் கோபுரத்தைத் தாக்கிய போது, கண்தெரியாத ஒருவர் காப்பாற்றப்பட்டார்.

அவரைக் காப்பற்றியதும் யார் தெரியுமா? அவரை தினந்தோறும் கூட்டிச் செல்லும் அவரின் வளர்ப்பு நாய்.




இரட்டைக்கோபுரத்தை முதலாவது விமானம் தாக்கியபோது உயிர் பிழைத்தவர்கள் எந்தப் பாதையால் வெளியேறுவது எனத்திண்டாடிக் கொண்டிருந்தபோது, கண்தெரியாதவரின் நாய் இரகசியப் பாதையினூடாகத் தனது எஜமானனைக் கூட்டிச்சென்று காப்பாற்றியது.

ஆனாலும், பாரிய கல்லொன்று நாய் மேல் விழுந்ததில் அந்த நாய் உயிர் இழந்து போய்விட்டது. தன் எஜமானைக் காப்பாற்றிவிட்டு தன்னுயிர் நீத்த நாயின் செயல் அதிசயமானதே.

சுனாமி ஏற்பட்ட போதுகூட, குழந்தையொன்று குப்பை மேட்டில்



கிடந்து உயிருடன் மீட்கப்பட்டதும்,பின்னர் அந்தக் குழந்தை தொடர்பில் உரிமை கோரும் வழக்கு நடந்ததும் மட்டக்களப்பில் நடந்த சம்பவம். இவ்விதம் இயற்கையிலும்,செயற்கையிலும் ஆச்சரியமான சம்பவங்கள் நடந்து முடிகின்றன.

இதற்கெல்லாம் விளக்கம், வியாக்கியானம் தேடுவது அர்த்தமற்றது.

இதேபோன்ற அதிசயங்கள் "நிஷா" வெள்ளப்பெருக்கிலும் நடந்தேறியது. இதில் சில அதிசயங்கள் வெளிப்பட்டாலும் பல நிகழ்வுகள் சம்பந்தப்பட்டவர்களுடனேயே சங்கமித்துப் போயிற்று.

## பிள்ளையார் சிலை

கண்டிவீதி -நுணாவில் பகுதியில் உள்ள மருதமரத்தின் கீழ் பிள்ளையார் சிலையொன்றைப் பிரதிஷ்டை செய்து அந்தப் பகுதிமக்கள் வழிபாடாற்றினர்.

*நிஷா* புயலில் அந்த மருத மரம் சரிந்து வீழ்ந்தபோது மரத்தின் அடியில் இருந்த பிள்ளையார் சிலை எந்தச் சேதமுமின்றி தப்பித்துக் கொண்டது. இது அப்பகுதியில் அதிசயமான நிகழ்வாகவே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இறைவன் மீது நம்பிக்கை கொண்டு வழிபாடு செய்கின்ற போது, அந்த இறைவனே தன்னை இயற்கை யின் சீற்றத்தில் இருந்து காப்பாற்றிக் கொள்ளவில்லை எனில் மும்



மலத்தில் சிக்குண்ட சாமானியர்களிடம் இறைபக்தி குறைவது இயல்பே.

அதேநேரம் மருதமரம் அடியோடு பிரண்டுபோக அதன் கீழ் இருந்த பிள்ளையார் சிலை சேதமின்றி இருப்பது, இறை நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தும் என்பதில் இரு வேறு கருத்திற்கிடமில்லை.

## புளியமர வேரில் கார்

வட்டுக்கோட்டைப்பகுதியில் பழுதடைந்த கார் ஒன்று புளிய மரத்தின் கீழ் விடப்பட்டிருந்தது.

"நிஷா" புயலில் புளியமரம் வேரோடு பிரண்டுபோக,புளியமர அடியில் நின்ற கார் இப்போது மேலேழுந்துள்ள புளியமரவேரில் தொங்கியபடி காட்சி கொடுத்தமை அப்பகுதியில் வேடிக்கையாகி மக்கள் கூட்டத்தைத் திரட்டிக்கொண்டது.

புளியமர நிழலில் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் புளியமரவேரின் மேல் தொங்கிக்கொள்ளலாம் என காரின் உரிமையாளர் இம்மியளவும் நினைத்திருக்க மாட்டார் அல்லவா?

இதனையே இயற்கை சொல்கிறது. மறைந்திருக்கவேண்டிய பொருள் மறைந்தே இருக்க வேண்டும். மண்ணில் மறைந்திருந்த வேர் தன்னை வெளிப்படுத்த முற்பட்டபோது அதுவே அந்த மரத்திற்கு முடிவுமாகியது.

அதேநேரம் எந்த மரம் காருக்கு நிழல் கொடுத்ததோ அதே மரம் அந்தக் காரை பழுதடையவும் செய்தது. இதுவே மனித உறவுக்குள்ளும் நடந்தேறும் நிஜங்கள்.இந்த உண்மையை உணரும் போதே மெய்யறிவு ஏற்படுகிறது.

எனவே, இயற்கையின் சீற்றம் கூட, மானிடத்திற்கு மெய்யறிவைப் புகட்டும் விசேட வகுப்பெனக் கணித்துக்கொள்ளலாம்.

இருந்தும் மெய்யறிவை உணராதாரும் இருக்கவே செய்கிறார்கள். நிஷா புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தங்குவதற்கு பாடசாலைகளில் இடம் கொடுக்கப்பட்டது மிகப்பெரும் கஷ்டங்களின் மத்தியில் வளங்களைச் சேகரித்து பாடசாலைகளை சீரமைத்திருக்கும் போது அங்கு தங்கியவர்கள் மதுபோதையில் தம்முள் முரண்பட்டுக்கொண்டு பாடசாலை வளங்களை சேதப்படுத்தினார்கள் என்ற செய்தி எத்துணை வேதனையானது.

இக்கட்டான நேரத்தில் அடைக்கலம் தந்த பாடசாலைகள், ஆலயங்கள்,பொது அமைப்புகளை எமது சொந்தச் சொத்தாகக்கருதி பராமரிப்பதை விடுத்து அங்கிருக்கும் தளபாடங்களை அடித்து உடைப்பது என்பது ஆறறிவு படைத்த மனிதர்கள் தம்மை ஐயறிவாக்கிக்கொள்ளும் செயலாகும்.

இது போன்ற நிகழ்வுகள் இடம் பெறுவதாலேயே இத்தகைய அனர்த்தங்களின் போது பாடசாலைகளைத் திறந்து பாதிக்கப்பட்டவர்களை வரவேற்க பாடசாலை நிர்வாகங்கள் தயக்கம் காட்டுகின்றன. *(வளரும்)*

சமயநெறி இல்லாதவரின் வாழ்க்கை உபயோக மற்றுப் போகும். மக்கள் சமயநெறி உடையவர்க ளாக இருந்தால்தான் ஒருநாட்டின் ஆட்சியும் நன்கு அமையும். – *பெர்னாட்ஷா*

வலம்புரி

# இறைமகனார் இயேசு மகிழ்ந்து ஏற்பது எதனை?

இன்று உலகில் உள்ள கோடிக்கணக்கான மக்கள் இயேசுபிரானின் பிறப்பை நத்தார் பண் டிகையாக கொண்டாடுகின்றனர்.

மானிடத்தின் மீட்பரான இயேசு பிரானின் பிறப்பு புனிதமானது.

பூமியில் பிறந்த மானிடம் பாதை மாறிய போது இயேசு பாலகன் இந்த மண்ணில் பிறப் பெடுத்தார்.

அவரின் போதனைகள் மானிடத்தை வழிப் படுத்துபவையாக அமைந்தன. மற்றவர்களின் பாவத்தை தானே சுமந்த இயேசுபிரானின் போத னைகள் இன்று புத்தகங்களில் மட்டுமே காணப் படுகின்றன.

மனிதர்களிடம் தெய்வீகம் இல்லாது போய் விட்டது.

உன்னைப்போல் பிறரையும் நேசி என்ற பிதா மகனின் போதனை எத்துணை உன்னதமா னது.

ஆனால் அதனை நாம் எத்தனை பேர் கடைப் பிடிக்கிறோம்? நத்தார் பண்டிகை என்பது கொண்டாடுவதற்கானது அல்ல. அது இயேசுபிரா னின் போதனைகளை நம் உள்ளங்களில் விதைக்கும் நாள்.

ஏழைகளுக்கு உதவி புரிந்து அவர்களின் வாழ்வில் ஒளி ஏற்றும் நாள். யாழ்ப்பாணத்தின் இன்றைய சூழ்நிலையில் ஏழைத் தாய்மார் ஒரு நேர உணவுக்கு வழியின்றி அவலப்படுகின்ற னர்.

சில தாய்மார் ஏதேனும் உதவுங்கள் என்று கெஞ்சுகின்றனர்.

இந்த அவலம் நம் எல்லோரின் நெஞ்சங்களி லும் ரணமாக தைக்கவேண்டும். உன்னைப் போல் பிறரையும் நேசி என்ற இயேசுபிரானின் வார்த்தைகள் யுத்தம் சூழ்ந்துள்ள இந்த நிலை யில் சிக்குண்டுள்ள எமக்கு மிகவும் பொருத்து டையதாகும்.

நானும், எனது குடும்பமும் உண்டு, உறங்கி னால் போதும் என்ற சுயநலத்தைப் போக்கவே இயேசு பாலகன் மானிடராய் அவதரித்தார்.

எனவே அவரின் பிறப்பை கொண்டாடும் நாம் ஏழைகளின் வாழ்வுக்காக உதவுவோம். நோயில், பஞ்சத்தில் வாடுகின்ற மூதியவர்களுக்கு தோள் கொடுப்போம். அதையே இறைமகனார் வேண்டு கிறார்.

அரசியலும், மதபீடங்களும் இன்று சுயநலத் தின் இருப்பிடங்களாகிவிட்டன. மதபீடங்கள் தமது நோக்கை மறந்து பயணிக்கின்றன.

சுகமான –கௌரவமான –குற்றங்கள் தவறு களை மூடி மறைப்பதற்கான ஓர் கவசமாக மத ஸ்தாபனங்கள் மாறுவதை இறைவன் ஒரு போதும் மன்னிக்க மாட்டார்.

ஆனால் இன்று உலகம் பூராகவும் சுயநலமே தலை விரித்தாடுகின்றது.

இந்த அவலத்தில் இருந்து மனித சமூகத்தை மீட்டெடுக்க –மீள இயேசு பிரானின் போதனை களை பின் பற்றுவோம். மற்றவர்களுக்காகவும் வாழ்வோம். பிறர் பசி போக்கி அதில் ஆனந்தம் அடைவோம்.

இதனையே இறைமகனார் இயேசு பிரான் மகிழ்ந்து ஏற்றுக் கொள்வார்.

# கிழக்கில் 11 மாதங்களில் 295 படுகொலைகள்

## —விடுதலைப் புலிகள் அறிக்கை—

(மட்டக்களப்பு)

அரசால் விடுவிக்கப்பட்டதாகக் கூறப்படும் கிழக்குப் பகுதி யில் 11மாதங்களில் 295 படுகொலைகளும், 176ஆட்கடத்தல் சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. படைகளும் அதனுடன் சேர்ந்தியங்கும் குழுக்களுமே காரணம் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறை குற்றஞ் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக் களப்பு மாவட்ட அரசியல் துறை வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

அரசு கிழக்கு மண்ணை ஆக்கிரமித்து அங்கே ஜனநாய கத்தை நிலைநாட்டிவிட்டதாக பொய்ப்பரப்புரை களைச் செய்து சர்வதேசத்தை ஏமாற்றிக்கொண்டு மறுபுறம் தனது தமிழினப் படுகொலையை தினம்தோறும் மிகவும் அமைதி யான முறையில் நடாத்திவருகின்றது.

தமிழின அழிப்பின் ஒரு அங்கமாக கடந்த காலங்களில் கிழக்கில் பல்வேறு படுகொலை சம்பவங்கள் மேற்கொண் டிருந்தன. படுகொலைகளின் எண்ணிக்கையின் அடிப்படை யில் மட்டும் இவைகள் வரலாற்றில் இடம்பிடித்தாலும் தினம் தோறும் அமைதியாக நடைபெறும் படுகொலைகள் இறுதி யில் பெரிய எண்ணிக்கையாக மாறுகின்றது என்பது நமது பார்வையில் பெரியளவில் தென்படவில்லை.

சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் ஜனநாயக ஆட்சியின் அளவை மதிப்பிட மனித உரிமை நிலைமைகளை அளவுகோலாகக் கொண்டு செயற்படும் அரசுகளும் மற்றும் அமைப்புகளும் சிங்களப் பேரினவாத அரசின் இத்தகைய படுகொலைகளைக் கண்டும் அரசுக்கு எதிராக நடவடிக் கைகளை எடுக்காமல் மௌனித்திருக்கின்றார்கள்.

அதேவேளை, மறைமுகமாக ஆதரவுகளை அவர்களுக்கு வழங்குவதோடு மறுதரப்பை குற்றம் சாட்டுவதும், அழுத்தங் களைப் பிரயோகித்து வருவதும் அவர்களின் நடுநிலைத் தன்மை மட்டில் சந்தேகங்களை ஏற்படுத்துகிறது.

கடந்த தைமாதம் தொடங்கி கார்த்திகை மாதம் வரையி லான 11 மாதங்களில் கிழக்கில் 193க்கு மேற்பட்ட படுகொலை கள் மற்றும் 110க்கு மேற்பட்ட ஆட்கடத்தல் சம்பவங்களும் நடந்துள்ளன. அதேகாலப் பகுதியில் மட்டக்களப்பு மாவட் டத்தில் மட்டும் 102க்கு மேற்பட்ட படுகொலைகளும் 66க்கு மேற்பட்ட ஆட்கடத்தல் சம்பவங்களும் நடந்துள்ளன.

## மலேசிய மண்சரிவில் புதையுண்ட இலங்கைப் பெண்ணின் சடலம் மீட்பு

(கோலாலம்பூர்)

மலேசியாவில் கடந்த 6ஆம்திகதி இடம்பெற்ற மண் சரிவில் புதையுண்ட இலங்கைப் பெண்மணியின் சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது. யோகேஸ்வரி என்ற மிருக வைத்தியரின் வீட்டில் பணிப்பெண்ணாகக் கடமை யாற்றிய இலங்கையைச் சேர்ந்த மேரி என்பவரது சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக இடம்பெற்ற தேடுதல் நடவடிக் கைகள் தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்தது. பின்னர் மலேசியா பொலிஸாரும் மீட்புப் பணியாளர்களும் இணைந்து நடத்திய தேடுதல் வேட்டையின் போது குறித்த பெண் மணியின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பெண் கடமையாற்றிய வீட்டிலிருந்து 50 மீற்றர் தொலைவில் அவரது சடலம் புதையுண்டு கிடந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இம் மண்சரிவில் 4 பேர் கொல்லப் பட்டும் 15 பேர் காயமடைந்தும் உள்ளதாகவும் 14 வீடுகள் முற்றாக சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(ஓ-5)

## மணித்தீவில் மண்டலபூர்த்தி

நயினாதீவு மலையிற்புலம் அருள்மிகு ஐயனார் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை அன்று பதினெட்டுப்படி திருவிளக்கு பூசையும், மண்டல பூர்த்தி விழாவும் நடைபெற உள்ளது.

அன்றைய தினம் காலை விசேட அஷ்டோத்திர சங்காபிஷேகமும், திருவிளக்குப் பூசையும், பஜனைப் பாடல்களும் இடம்பெறும்.

தொடர்ந்து நா. இராதாகிருஷ்ணன் ஆசிரியர் *ஐயப்பன் பெருமை* என்ற தலைப்பில் கதாப்பிரசங்கம் நிகழ்த் தவுள்ளார்.

(ஓ)

## கிறிஸ்மஸ் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதி நடத்தும் கிறிஸ்மஸ் பிரார்த்தனை நிகழ்வு இன்று வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு மானிப்பாய் வீதி தாவடியிலுள்ள சமிதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ஓ-2)

# கடவுளின் நாமத்தை உச்சரிப்பதே துயரங்களில் இருந்து விடுபட ஒரே வழி

இவ்வுலகத்தில் கடவுளின் நாமத்தை நித்தமும் உச்சரிப்பது தான் துன்ப துயரங்களில் இருந்து விடுதலை பெற ஒரே வழி. கடவுளின் திருப்பெயர் மட்டுமே நம்மை காப்பாற்ற வல்லது. கடவுளின் நாமத்தை உச்சரிப்பதன் மூலம் எத்தகைய பெரும் காரியத்தையும் நிறைவேற்ற முடியும். – பாபா

இறை நாம உச்சரிப்பு என்பது இடைவிடாது கடவுளின் பெயரைக் கூறுவது அல்லது நினைத்திருப்பது. கடவுளை அடைவதற்கு முயற்சி செய்கின்ற ஒரு பக்தனுக்கு விதிக் கப்பட்ட ஆன்மீகப் பயிற்சிகளில் இதுவும் ஒன்று பகவானே இதற்கு விளக்கம் தருவதற்கு ஒரு நிகழ்ச்சியினை விளக் குகின்றார்.


ஒரு பக்தன் கேட்கின்றார், சுவாமி! நான் இறைவனை சரணாகதியடைய என்ன வழி முறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அதற்கு சுவாமி மிக மென்மையாக அருளினார் ; தங்கமே! சரணாகதி உனக்கு அப்பாற்பட்டது. அதைப்பற்றி ஏன் அலட்டிக் கொள்கிறாய்? இறை நாமத்தை இடைவிடாது உச்சரி. கூப்பிட்ட குரலுக்கு இறைவன் ஓடி வருவார். அது தவறாது பலன் தரும்.

இறைநாமத்தை உச்சரிக்கும் போது உணர்ச்சிப் பெருக்குடன் ஆழ்ந்த பக்தியோடு அன்போடு கூறு. அது மாபெரும் நலனை உனக்குத் தருகின்றது. சமனிலையில்லா மனம் பேராசை, இன்னும் கேடு கொண்ட எண்ணம் கொள்ளும் வேளையிலும் குணம் தரவல்ல ஒரே தெய்வீக மருந்து இறை நாம உச்சரிப்பே. அதுவே எமக்கு மன அமைதியையும், திருப்தியையும் தரும். நீ தேர்ந்தெடுக்கின்ற கடவுளின் ஆயிரம் பெயர்களில் எதுவானாலும் பரவாயில் லை. உனக்கு சரி என்ற பெயரை எடுத்து ஒரு நாளைக்கு குறைந்தது ஐந்து நிமிட நேரமாவது உச்சரி. அதனால் நாம் அடைவது சலன சபலமில்லாத சந்தோஷமான உலகம்.

***ஜெய் சாயிராம்***

மற்றவர் மேல் தயை, இரக்கம், கருணை, அண்டி நிறைந்தவனே மனிதன். ஏதாவது ஒருயிர் துன்புறுத்தப்படும் போது நம்மை அறியாமலே அதன் மேல் இரக்கம் மேலிடுகின் றது. காரணம் இது மனிதனின் இயற்கையான சுபாவம். ஆனால் மனிதனை இதன் எதிர்காரணிகளான சுயநலம், பொறாமை, ஆத்திரம், என்பனவும் ஆட்டிப்படைக்கின்றது. இதனாலேயே மூர்க்கமான மிருக உணர்வை மனிதன் பெறுகின்றான். வக்கிரமான செயற்பாடுகளை சாதாரண மனித உள்ளம் வெறுக்கத்தக்க கைங்கரியத்தை ஆற்று கின்றான்.

அடுத்தவர் தீமை செய்யும் போது பரிதவிக்கும் மனித உள்ளம் தானே அச்செயலைப் புரியும் போது சரியென நியாயம் கற்பிக்கின்றது. இதுவே மனிதனின் ஆணவ



அறியாமை உல கம் மனிதனின் நிட்டூரம் தாங்க முடி யாது தவிக்கின்றது. இந்த வேளைகளில் தான் ; இன்பமாய் இருக்க வேண்டிய மனித உலகம் அல் லப்படுகின்றது. அவதியுறுகின்றது என்னும் வேளை களில் இறைவனின் மனித அவதாரம் பூமியில் நிகழ்கின்றது.

பகவான் பாபா உலகத்தின் தத்துவம். அவருடைய அருளும் கருணையும் வார்த்தைகளுக்கு அடங்காது.

***யாதவன்***

## இத்தாலியில் நில நடுக்கம்

(மிலன்)

இத்தாலியின் வடக்கு பகுதியில் லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் நிலநடுக்கத்தின் தாக்கம் 5.2 புள்ளிகளாக பதிவாகியது.

இந்த நிலநடுக்கத்தால் அப்பகுதியில் தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்பட்டு பாதிப்புக்குள்ளாகியுள்ளன. பெரிய அளவில் சேதம் ஏதும் ஏற்படவில்லை என்று அதிகாரபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன. (5)

## ராட்டினத்தில் கோளாறு 173 பேர் தவிப்பு

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் உள்ள உலகிலேயே மிகப் பெரிய ராட்சத ராட்டினத்தில் திடீர் என ஏற்பட்ட மின் கோளாறால் 173 பேர் பல மணி நேரம் தவிக்கும் நிலை ஏற்பட்டது.

ராட்டினம் திடீர் என நின்றதால் அதில் இருந்தவர்கள் பீதியால் கூக்குரல் எழுப்பினர். அவர்களை மீட்கும் பணியாளர்கள் பத்திரமாக மீட்டனர். (5)

உலக தரிசனம்

# இந்திய படைகள் தாக்கினால் அடுத்த நிமிடமே பதிலடியாம்

## இப்படிக் கூறுகிறார் பாக். இராணுவத் தளபதி

(இஸ்லாமாபாத்)

இந்தியா தாக்குதல் நடத்தினால் அடுத்த சில நிமிடங்களில் பாகிஸ்தான் படைகளும் தக்க பதிலடி கொடுக்கும் என அந்நாட்டின் இராணுவத் தளபதி ஜெனரல் அஷ்பக் பர்வேஸ் கயானி தெரிவித்துள்ளார்.

மும்மைத் தாக்குதல் எதிரொலியாக இந்திய -பாகிஸ்தான் எல்லையில் போர் பதட்டம் நிலவுகிறது. இந்தியப் பாகிஸ்தான் படைகள் எந்த நேரத்திலும் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் பாகிஸ்தான் அரசு வட்டாரங்களிலும் மக்கள் மத்தியிலும் எழுந்துள்ளது.

இதனால் கடந்த சில தினங்களாக பாகிஸ்தான் போர் விமானங்கள் அந்நாட்டின் முக்கிய நகரங்கள் மீது வலம் வந்து கண் காணிப்புப் பணியில் ஈடுபட்டன.

இந்நிலையில் பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரியை கடந்த திங்கட்கிழமை இரவு இராணுவத் தளபதி அஷ்பக் பர்வேஸ் கியானி சந்தித்துப் பேசினார்.



ஜனாதிபதி இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடந்தது. அப்போது இராணுவத்தினரின் தயார் நிலை உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளன. சந்திப்புக்குப் பின் பத்திரிகை ஒன்றுக்குப் பேட்டியளித்த பாகிஸ்தான் இராணுவத் தளபதி கயானி கூறியதாவது,

எந்த நிலைமையையும் சந்திக்கும் வகையில் பாகிஸ்தான் இராணுவம் தயார் நிலையில் உள்ளது. நாட்டுக்காக தங்களைத் தியாகம் செய்ய இராணுவ வீரர்கள் தயார் நிலையில் உள்ளனர். பாகிஸ்தான் பகுதியில் இந்தியப் படைகள் தாக்குதல் நடத்தினால் அடுத்த நில நிமிடங்களில் பாகிஸ்தான் படைகளும் தக்கப் பதிலடி கொடுக்கும் இவ்வாறு கயானி கூறியுள்ளார். (5)

## நீர் மூழ்கி கப்பலிருந்து செலுத்தும் ஏவுகணை சோதனையில் ரஷ்யா தோல்வி

(மாஸ்கோ)

ரஷ்யா நீர் மூழ்கி கப்பலில் இருந்து செலுத்தப்படும் புலாவா என்ற ஏவுகணையை செலுத்தி சோதனை செய்தது.

இந்த சோதனை முயற்சி தோல்வி அடைந்தது.

ரஷ்யா அடுத்த ஆண்டு அணு ஆயுதம் தாங்கிய நீர் மூழ்கி கப்பல்களில் புலாவா ஏவுகணையை பொருத்த திட்டமிட்டது. இந்த ஏவுகணை 8 ஆயிரம் கி.மீ. தூரத்துக்கு சீறிப் பாய்ந்து தாக்கக்கூடியவை ஆகும்.

இருந்த போதிலும் இந்த சோதனை முயற்சி பாதியிலேயே தோல்வி அடைந்தது.

செவெரோமோர்ஸ்க் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டு உள்ள டிமிட்ரி டோன்ஸ்கோய் என்ற நீர் மூழ்கி கப்பலில் இருந்து செலுத் தப்பட்ட ஏவுகணை அதன் நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் இருந்து விலகி சென்று விட்டது.

அது தோல்வி அடைந்ததும் அது தன்னை தானே அழித்துக் கொள்ளவதற்கான உத்தரவு அதற்கு பிறப்பிக்கப்பட்டது. இதனால் எந்த வித சேதமும் இல்லை உயிரிழப்பும் ஏற்படவில்லை. (5)

## ஹிலாரிக்கு 64 இலட்சம் டொலர் தேர்தல் பிரசாரத்தால் கடன்


(வோஷிங்டன்)

அமெரிக்க வெளியுறவு அமைச்சராக நியமிக்கப்படவுள்ள ஹிலாரி கிளிண்டனுக்கு 6.4 மில்லியன் டொலர் தேர்தல் பிரசாரம் செய்த வகையில் கடன் உள்ளது.

ஜனநாயகக் கட்சிக்கான அதிபர் வேட்பாளர் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியுற்றார் ஹிலாரி. அவர் தேர்தல் பிரசாரத்திற்காக நிதி திரட்டி கோடிகளை வாரியிறைத்தார்.


கடந்த ஆண்டு நவம்பரில் 9 இலட்சத்து 85 ஆயிரம் டொலருடன் பிரசாரத்தை ஆரம்பித்த ஹிலாரி அந்த மாத இறுதியிலேயே 2 இலட்சத்து 90 ஆயிரம் டொலர்களை பிரசார நிதியாகத் திரட்டினார்.

ஹிலாரி தேர்தல் பிரசார நிதி திரட்டியது போக, தனிப்பட்ட முறையில் 13.2 மில்லியன் டொலர் கடன்வாங்கியுள்ளார். அவரது தேர்தல் பிரசாரக் கடன் கடந்த ஜூன் இறுதியில் 12 மில்லியன் டொலராக இருந்தது. அதன் பின்னர் படிப் படியாகக் குறைந்து, நவம்பர் இறுதியில் 6.4 மில்லியன் டொ லராக இருந்தது.



இந்த 6.4 மில்லியன்டொலர்கடனை ஹிலாரி 16பேருக்கு திருப்பிச் செலுத்த வேண்டும். ஒபாமாவை எதிர்த்துப் போட்டியிடுமாறு ஆலோசனை கூறிய பென்சூயென் என்ற தேர்தல் ஆலோ சனை நிறுவனத்திற்குத்தான் இவர் அதிக அளவு கடன் தொகையை திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கிறது.

இந்தக் கடனை தான் வெளியுறவு அமைச்சராக பதவியேற்கும் முன் செலுத்திவிடுவதாக நம்பிக்கை தெரிவித்துள்ளார் ஹிலாரி. (5)



போபாலில் கிறிஸ்மஸ் தாத்தா வேடமிட்ட ஒருவர் பறவைகளுக்கு தாராளமாக தானியம் வழங்குகிறார்.

## மும்பை தாக்குதலில் பாக். இராணுவத்திற்கு தொடர்பு

### அமெரிக்கா தகவல்

(மும்பை)

மும்பை தாக்குதலில் பாகிஸ்தான் இராணுவத்துக்கும் தொடர்பு உண்டு என அமெரிக்க உளவு நிறுவனம் எப்.பி.ஐ. உறுதி படத் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா உளவு நிறுவனமான எப்.பி.ஐ.யின் சிறப்பு குழு மும்பை தாக்குதல் குறித்து விசாரணை நடத்துவதற்காக இந்தியா வந்தது.

இந்த குழுவினர் பிடிபட்ட பயங்கரவாதி அஜ்மல் கசாப் இடமும் விசாரணை நடாத்தினார்கள்.

இந்நிலையில் தங்களது புலனாய்வு முடிந்து விட்டதாகவும் அதன்படி மும்பை தாக்குதலில் பாகிஸ்தானுக்கு நிச்சயமாக தொடர்பு உண்டு என்றும் அவர்கள் கூறியுள்ளனர். பாகிஸ்தான் இராணுவமும் இந்த தாக்குதல் சம்பவத்தில் மறைமுகமாக ஈடுபட்டிருக்கலாம் என்பதை மறுக்க முடியாது என்ற அதிர்ச்சி தகவலையும் அவர்கள் வெளியிட்டுள்ளனர். (5)

## மும்பைத் தாக்குதல் குற்றவாளி கசாப் பாகிஸ்தானியர் அல்ல

### நவாஸ் ஷெரீப் பல்டி

(இஸ்லாமாபாத்)

மும்பை தாக்குதல் குற்றவாளி அஜ்மல் கசாப் பாகிஸ்தானியார் இல்லை என பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் திடீர் மறுப்பு தெரிவித்துள்ளார்.

மும்பையில் நடந்த தீவிரவாதிகள் தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள அஜ்மல் கசாப் பாகிஸ்தானை சேர்ந்தவர் என விசாரணை அதிகாரிகள் தெரிவித்து வருகிறார்கள். இதனை பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பும் முதலில் ஒப்புக்கொண்டார்.

இந் நிலையில், நவாஸ் ஷெரீப் அளித்துள்ள ஒரு போட்டியில் கசாப் பாகிஸ்தானியர் இல்லை என்று கூறியுள்ளார்.

அஜ்மல் அமீர் கசாப் பாகிஸ்தானியர் தான் என்பதை உறுதி செய்ய இந்தியா போது மான ஆதாரம் அளிக்க வேண்டும் பாகிஸ்தான் அரசாங்கம் மும்பையில் நடந்த தாக்குதலுக்கு எந்த விதத்திலும் பொறுப்பில்லை.

இந்தியா போதிய ஆதாரத்தை அளிக்குமானால் பயங்கரவாதிகள் மீது பாகிஸ்தான் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் அதற்காக நான் பாகிஸ்தான் அதிபர் சர்தாரியை சந்



தித்து உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்த தயாராக இருக்கிறேன் இவ்வாறு நவாஸ் திடீரென மாற்றி பேசியுள்ளார்.

முன்னதாக கடந்த வெள்ளிக்கிழமை யன்று செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த நவாஸ் ஷெரீப் அஜ்மல் கசாப் பாகிஸ்தானியர் தான் என்றும் அஜ்மலின் சொந்த ஊரான பரீத்கோட்டுக்குச் சென்று விசாரித்ததாகவும் கூறியிருந்தார். இதனால் பாகிஸ்தான் அரசு தர்மசங்கட சூழலுக்குத் தள்ளப்பட்டது.

ஆனால் தற்போது நவாஸ் பல்டி அடித்துள்ளது. அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது. (5)

# பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் இலங்கை அணி தயங்குகிறது

(கொழும்பு)

மும்பையில் தாக்குதல் நடத்திய பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளக் கூடாது என்ற முடிவை இலங்கை கிரிக்கெட் சபை எடுக்கும் எனத் தெரிகிறது.

நேற்றுமுன்தினம் பதவிநீக்கம் செய்யப்பட்ட இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் அர்ஜுன ரணதுங்க கடந்த வாரம் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் பாகிஸ்தானில் இலங்கை அணி விளையாடும் எனக் கூறியிருந்தார்.

இந்நிலையில் நாங்கள் 'இந்திய ஆதரவு கொள்கையை கடைப்பிடிப்போம். எப்படிப்பட்ட சூழ்நிலையில் பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தை இந்தியா ரத்து செய்தது என்பது எங்களுக்குத் தெரியும். அதுபோலவே இலங்கை



அணியும் தனது பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தை ரத்து செய்யும் என்று பெயர் வெளியிட விரும்பாத உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக இலங்கை விளையாட்டுத் துறை அமைச்சர் காமினி லொக்குகேயிடம் கேட்டபோது இந்த விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் ஆலோசனை நடத்தி முடிவு எடுக்கப்படும் என்றார்.

(5)

## இலங்கை கிரிக்கெட் சபை கலைப்பு

(கொழும்பு)

இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்கா தலைமையில் செயற்பட்டு வந்த இலங்கை கிரிக்கெட் சபையின் இடைக்கால சபை நேற்றுமுன்தினம் திடீர் என கலைக்கப்பட்டது. ரணதுங்காவும் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். விளையாட்டுத்துறை அமைச்சர் காமினி லொக்குகே இந்த அதிரடி நடவடிக்கையை எடுத்துள்ளார்.

2008ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கை கிரிக்கெட் சபைத் தலைமைப் பொறுப்பை ஏற்ற முன்னாள் அணித்தலைவர் ரணதுங்க இங்கிலாந்து சுற்றுப்பயண திட்டமிடல் மற்றும் ஐ.பி.எல். தொடர்பாக மேற்கொண்ட சில முடிவுகள் வீரர்களுக்குள்ளே அதிருத்தியை ஏற்படுத்தின.

மேலும் விளையாட்டுத்துறை அமைச்சருடன் மோதல் போக்கை கடைப்பிடித்து வந்ததாகத் தெரிகிறது.

இதன் உச்சக்கட்டமாக தற்போது இலங்கைக் கிரிக்கெட் சபைத்தலைவர் பதவியிலிருந்து ரணதுங்கா நீக்கப்பட்டுள்ளார். அவர் கிரிக்கெட் சபை நிர்வாகிகளுடனோ அல்லது வீரர்களுடனோ ஒருங்கிணைந்து செயல்படவில்லை என்று அமைச்சர் காமினி லொக்குகே குறிப்பிட்டார்.

புதிய நிர்வாகம் நியமிக்கப்படும் வரை அமைச்சின் செயலாளர் லியனகே கிரிக்கெட் சபை பணிகளை கவனிப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## டிம் நில்சன் ஒப்பந்தம் நீடிப்பு

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் டிம் நில்சனின் ஒப்பந்தம் மேலும் 3 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளுக்குப் பின்னர் அவுஸ்திரேலிய பயிற்சியாளராக இருந்த ஜோன் புக்கனன் விலகியதைத் தொடர்ந்து புதிய பயிற்சியாளராக டிம் நில்சன் நியமிக்கப்பட்டார்.

பயிற்சியாளராக நில்சன் பொறுப்பேற்றது முதல் அவுஸ்திரேலிய அணியின் வெற்றிப் பயணத்தில் பின்னடைவு ஏற்பட்டது. எனினும் டிம் நில்சனின் பதவிக்காலத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீடிக்க கிரிக்கெட் அவுஸ்திரேலியா முடிவு செய்துள்ளது.

அடுத்த ஆண்டு நடைபெற்றவுள்ள ஆஷஸ் போட்டியுடன் நில்சனின் பதவிக் காலம் முடிபடைகின்ற போதிலும் அவரது ஒப்பந்தம் 2011ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ண போட்டிகள் வரையில் நீடிக்கப்படுவதாக கிரிக்கெட் அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது. டிம் நில்சன் சிறப்பான முறையில் செயல்பட்டு வருவதால் அவரது ஒப்பந்தம் நீடிக்கப்படுவதாக கிரிக்கெட் அவுஸ்திரேலியாவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(5)

## காம்பீர், யுவராஜ் சிங் சதம் அடிக்க வாய்ப்பு; ஆட்டத்தை தாமதமாக இடைநிறுத்தினேன்

### தோனி தெரிவிப்பு



காம்பீர் மற்றும் யுவராஜ் சிங் சதம் அடிக்க வாய்ப்பு தருவதற்காக ஆட்டத்தை இடைநிறுத்தும் முடிவை தாமதப்படுத்தியதாக அணித் தலைவர் தோனி கூறியுள்ளார்.

மொகாலியில் நடைபெற்ற இந்தியா–இங்கிலாந்துக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட் சமனிலையில் முடிபடைந்தது. இதனையடுத்து இந்தியா 1:0 என தொடரை கைப்பற்றியது.

நேற்று முன்தினம் இந்திய அணி 7 விக்கெட் இழப்புக்கு 251 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது இதனால் இங்கிலாந்துக்கு 403 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இந்திய அணி தாமதமாக ஆட்டத்தை இடைநிறுத்தியதாக கருதப்பட்டது. பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அணித்தலைவர் தோனி இதற்கு விளக்கமளித்தார்.

காம்பீர் மற்றும் யுவராஜ் சிங் சதம் அடிக்க வாய்பளிப்பதற்காக தாமதமாக ஆட்டத்தை இடைநிறுத்தியதாகவும் இது அணி எடுத்த முடிபு என்றும் அவர் கூறினார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இந்த இருவரும் சதம் அடிக்கும் வாய்ப்பை தவறவிட்டதாக அவர் கூறினார்.

இந்திய பந்து வீச்சாளர்கள் குறிப்பாக வேகப்பந்து வீச்சாளர்கள் சிறப்பாக பந்து வீசியதாக பாராட்டு தெரிவித்த தோனி ஆட்டக்காரர்களும் நன்றாக விளையாடியதாக கூறினார். இந்திய அணி சரியாக திட்டமிட்டு அதற்கேற்ப விளையாடியதாக அவர் கூறினார்.

மொகாலி டெஸ்ட் போட்டியில் பனிமூட்டம் காரணமாக 90 ஓவர்கள் வரை வீச முடியாமல் போனதே இந்த டெஸ்ட் சமனிலையில் முடிபடைய காரணம் என்று அவர் கூறினார்.

## பாக்.கிரிக்கெட் சபையின் ஐ.சி.எல்.தடை நீக்கம்?

பாகிஸ்தான் தொடரை இந்தியா ரத்து செய்ததற்கு பதிலடியாக உள்நாட்டு ஐ.சி. எல். வீரர்கள் மீதான தடையை நீக்க பாகீஸ்தான் கிரிக்கெட் சபை (பி.சி.பி) முடிபு செய்துள்ளதாக தெரிகிறது.

இந்திய கிரிக்கெட் சபைக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட இந்திய கிரிக்கெட் லீக் (ஐ.சி.எல்) அமைப்பில் கலந்து கொள்ளும் வீரர்களுக்கு சர்வதேச அளவில் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் இங்கிலாந்து, இலங்கை கிரிக்கெட் சபைகள் தங்கள் வீரர்கள் மீதான தடையை நீக்கி இருந்தன.

மும்பை தாக்குதலால் மத்திய அரசின் அனுமதி கிடைக்காததால் பாகிஸ்தான் தொடரை இந்திய கிரிக்கெட் சபை ரத்து செய்தது. இதற்கு பதிலடியாக பாகிஸ்தானில் தடை செய்யப்பட்ட ஐ.சி.எல். வீரர்கள் மீதான தடையை பாக். கிரிக்கெட் சபை விலக்கிக்கொள்ள உள்ளதாகத் தெரிகிறது.

இது குறித்து பாக். கிரிக்கெட் சபை அதிகாரிகள் தெரிவித்ததாவது, பாகிஸ்தான் ஐ.சி. எல் வீரர்களிடம் இருந்து தடையை நீக்க வேண்டும் என புதிய கடிதம் வந்துள்ளது. அணியின் தேர்வுக்குழு தலைவர் அப்துல் காதிர், தலைமை இயக்குநர் ஜாவிட் மியன்டாட் இருவரும் சேர்ந்து பாகிஸ்தான். ஐ.சி.எல். வீரர்கள் உள் நாட்டு கிரிக்கெட்டில் பங்கேற்க அனுமதி அளிக்க இருக்கிறார்கள். இவ்வாறு பாக். சபை அதிகாரிகள் தெரிவித்தனர். வீரர்கள் தடை நீக்கம் குறித்து இன்ஸமாம் கூறியதாவது,


எதிர்காலத்தில் ஏற்படும் பொருளாதார சிக்கல்களை சமாளிக்க ஐ.சி.எல்.தொடரில் பங்கேற்றோம். ஆனால் இப்போது நிலைமை முற்றிலும் தலைகீழாகிவிட்டது.

இந்தியாவுடனான உறவு பாதித்துள்ள நிலையில் ஐ.சி.எல்.வீரர்கள் இனி இந்தியா சென்று விளையாட பாகிஸ்தான் அரசு அனுமதிக்காது. ஐ.சி.எல்.வீரர்களை உள்நாட்டு கிரிக்கெட்டில் பங்கேற்க அனுமதிக்க வேண்டும் இவ்வாறு இன்ஸமாம் தெரிவித்தார். இதனிடையே பாகிஸ்தான் வீரர்கள் இந்திய கிரிக்கெட் சபையினால் நடத்தப்படும் ஐ.சி. எல். போட்டிகளில் பங்குபெறுவதிலும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

(5)

## டெஸ்ட் போட்டிகளில் தொடர்ந்து விளையாடுவேன்

### ஹைடன் கூறுகிறார்



(சிட்னி)

டெஸ்ட் போட்டியிலிருந்து ஓய்வு பெற இருப்பதாக வெளியான செய்தியை அவுஸ்திரேலிய ஆரம்ப துடுப்பாட்ட வீரர் மத்யூ ஹைடன் மறுத்துள்ளார். அவுஸ்திரேலியாவின் முக்கிய துடுப்பாட்ட வீரராக விளங்கும் ஹைடனுக்கு 37 வயதாகிறது.

சமீப காலமாக அவர் சிறப்பாக ஆடமுடியாமல் தடுமாறி வருகிறார். இதனையடுத்து அவர் ஓய்வு பெறுவது பற்றி விவாதிக்கப்பட்டு வருகிறது. இந்தியாவுக்கு எதிரான தொடரில் தடுமாறிய அவர் தற்போது தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரிலும் சிறப்பாக ஆடவில்லை.

இதனையடுத்து ஹைடன் ஓய்வு பெற முடிபு செய்திருப்பதாகவும் தென்னாபிரிக்க தொடருக்கு பின்னர் அவர் ஓய்வு பெறுவார் என்றும் கூறப்பட்டது. ஆனால் ஹைடன் இதனை மறுத்துள்ளார்.

தான் தொடர்ந்து டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவேன் என்று அவர் கூறினார். அவுஸ்திரேலிய தேர்வுக் குழுவினரும் ஹைடன் அணியில் இடம்பெறுவதை ஆதரிக்கின்றனர். அடுத்த ஆண்டு ஆஷஸ் தொடர் வரை ஹைடன் விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஐ.சி.சி. தர வரிசையில் இந்தியா இரண்டாமிடம்

(டுபாய்)

ஐ.சி.சியின் டெஸ்ட் போட்டிகளுக்கான அணி தரவரிசை பட்டியலில் இந்தியா2 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

இங்கிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்ட்டில் சமநிலை செய்து தொடரை 1 -0 என்ற கணக்கில் இந்தியா கைப்பற்றியது.

நடைபெற்று வரும் தொடரில் தென்னாபிரிக்கா 2-0 அல்லது 2-1 என வெற்றி பெற்றாலோ அல்லது 1-1 என சமநிலை செய்தாலோ மீண்டும் 2ஆவது இடத்தை பிடிக்கும்.

அதே நேரத்தில் தென்னாபிரிக்கா அவுஸ்திரேலியாவை 3-0 என வீழ்த்தினால் முதலிடத்திற்கு முன்னேறி விடும். அவுஸ்திரேலிய




இதனையடுத்து டெஸ்ட் போட்டிகளுக்கான தரவரிசையில் இந்தியா தென்னாபிரிக்காவை பின்னுக்கு தள்ளி 2ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

எனினும் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக அணி கடைசி இரண்டு டெஸ்ட்களில் வெற்றி பெற்றால் முதலிடத்தை தக்க வைத்துக் கொள்வதோடு தென்னாபிரிக்காவை மேலும் பின்னுக்குத் தள்ளிவிடும்.

(5)

# பம்பைமடுவில் கிளைமோர் தாக்குதல் இராணுவ சிப்பாய் பலி; நால்வர் காயம்

(வவுனியா)

வவுனியா பம்பைமடுப் பகுதியில் நேற்று புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்ற கிளைமோர் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதுடன் இரண்டு இராணுவத்தினர் உட்பட நால்வர் காயமடைந்தனர்.

பம்பைமடுப் பகுதிக்கும் மணிப்புரப் பகுதிக்கும் இடையிலேயே இந்தத் தாக்குதல் நடந்துள்ளது.

விறகு வெட்டச்சென்றுவிட்டு திரும்பிக் கொண்டிருந்த பொதுமக்களின் உழவு இயந்திரத்தில் பயணித்த இராணுவத்தினர் மீதே இந்தக் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விறகு வெட்டிவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது தம்மை வழிமறித்த இராணுவத்தினர், அனுமதியில்லாது விறகு வெட்டச்சென்றமை தொடர்பாக தங்களிடம் விசாரணை மேற்கொண்டதாகவும் இதன் பின்னர் உழவு இயந்திரத்தில் ஏற்றிக் கொண்டு வண்டியை இராணுவ முகாமுக்குச் செலுத்துமாறு பணித்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

இராணுவத்தினரின் கட்டளைக்கு அமைய வண்டியை த் திருப்பிக் கொண்டு வழியில் நின்ற 7 படையினரையும் ஏற்றிக் கொண்டு இராணுவ முகாமுக்குச் செல்லும் போதே கிளைமோர்க் குண்டு வெடித்ததாகவும் காயமடைந்த பொது மகன் தெரிவித்துள்ளார்.

இச் சம்பவத்தில் காயமடைந்த பொது மக்கள் இருவரும் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தாகவும் அவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

## வன்னிப் பகுதியில் பரவ...

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பரந்தன் மக்கள் குடியிருப்பு பகுதிகளை நோக்கி வான் படையின் வானூர்திகள் இரண்டு தடவைகள் பரசூட் கொத்துக் குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளன.

நேற்று முன்தினம் இரவு 10.15 மணியளவில் ஒரு தடவையும் நேற்றுக் காலை 8 மணியளவில் இன்னொரு தடவையும் இத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இதில் அப்பகுதியில் இருந்த கத்தோலிக்க கன்னியர்மடம்,பொதுமக்களின் பல வீடுகள், வணிக நிலையங்கள் என்பன சேதமடைந்துள்ளதுடன் கால்நடைகள் பலவும் கொல்லப்பட்டுள்ளன.

இதேவேளை முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் ஆழிப்பேரலையால் இடம் பெயர்ந்திருந்த மக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத்து நேற்றுக்காலை 8 மணியளவில் வான் படையின் வானூர்திகள்குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளன.

இதில் பொதுமக்களின் இரண்டு வீடுகள் சேதமாகியுள்ளன. இத்தாக்குதலையடுத்து அப்பகுதியில் காலை வேளை கடற்றொழில் பாதிக்கப்பட்டது.

சில வாரங்களுக்கு முன்பு கூட இதே போன்ற பரசூட் கொத்துக் குண்டுகளை கிளிநொச்சி மருத்துவமனைக்கு அருகிலும் பரந்தன் கல்லாறு பகுதியிலும் வானூர்திகள் வீசின என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை முல்லைத்தீவு மாவட்டம் வற்றாப்பளை மற்றும் கேப்பாபுலவுப் பகுதிகள் மீதும் படையினர் நேற்று செறிவான எறிகணைத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

முள்ளிவளையில் இருந்து இடம்பெயர்ந்த பெருமளவிலான மக்கள் இக் கிராமங்களில் தங்கியிருந்த நிலையில் அப்பகுதி மீது படையினர் செறிவான எறிகணைத் தாக்குதலை நடத்தியுள்ளனர். (ச-5)

## புலிகளுடன்...

விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தையினை அரசாங்கம் மேற்கொள்ளும் என இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

விடுதலைப் புலிகள் வசம் உள்ளவர் படைத்தரப்பைச் சேர்ந்தவர். அவரை விடுவிப்பது தொடர்பான முயற்சிகளில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

விடுதலைப்புலிகள் வசம் படைத்தரப்பை சேர்ந்தவர் இருப்பதை உறுதி செய்யப்பட்டுள்ளதால் நாம் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக தொடர்புகளை மேற்கொள்ளவுள்ளோம்.

எனினும் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக பேச்சுகள் இதுவரை தொடங்கப்படவில்லை என்றார் அவர்.(ச-5)

## வன்னியில் உணவத்...

புலிகள் அமைப்புக்கு எதிராக தமிழ் மக்களே போராட்டங்களை ஆரம்பித் துள்ளனர். கடந்த வாரம் சாவகச்சேரியில் 16 ஆயிரம் பேர் கூடி விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தியிருந்த னர்.

பலவந்தமாக புலிகள் அமைப்பில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்களின் உறவினர்கள் உட்பட பலர் இதில் கலந்து கொண்டிருந்தனர் என அவர் குறிப்பிட்டார்.

2002ஆம் ஆண்டு போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்திற்குச் சென்ற விடுதலைப் புலிகள் அங்கிருந்த மாணவர்கள் உள்ளிட்ட பல இளைஞர்களைப் பலவந்தமாக படையில் இணைத்துக் கொண்டதாக ரம்புக்வெல குற்றம் சாட்டினார்.

### எதிர்க்கட்சிகளின் விமர்சனம்

இதேவேளை வன்னிப் பகுதியில் தற்பொழுது நடந்துவரும் மோதல்களில் படையினருக்கு ஏற்படும் இழப்புக்கள் குறித்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்தவரும் கருத்துக்கள் வருத்தமளிப்பதாக அமைச்சர் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியும் மங்கள சமரவீரவும் இணைந்து டிபன்ஸ் வோட்ச் எனும் இணையத்தளத்தை உருவாக்கி மோதல்களில் இராணுவத்தினருக்கு ஏற்படும் இழப்புக்களை அதிகரித்துக் கூறிவருவதாகவும் மோதல்களில் 25 இராணுவத்தினர் கொல்லப்பட்டால் அதில் 26 பேர் எனக் கூறி மகிழ்ந்து வருவதாகவும் ரம்புக்வெல குறிப்பிட்டார்.

வன்னி மோதல்கள் குறித்து அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரல்கள் எதுவும் இல்லை. பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடு. மோதல் களத்தில் அமைக்கப்படும் வியூகங்கள் அனைத்தும் இராணுவத்தினருடையதே என பாதுகாப்பு பேச்சாளர் கூறினார்.

கிளிநொச்சியை இழந்தாலும் மோதல்கள் தொடரும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் கூறியிருப்பதானது கிளிநொச்சியை அரசாங்கப் படைகள் அண்மித்துள்ளன என்பதை ஏற்றுக் கொள்ளும் வகையில் அமைந்திருப்பதாக அவர் தெரிவித்தார். (ச-5)

## மூன்றாவது விமான ஓடு...

57-வது படையணியினர் கிளிநொச்சிப் பகுதியில் அமைந்துள்ள அடம்பன் பகுதியையும் அம்பகாமம் பகுதியையும் கைப்பற்றினர் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தர்ர்.

அதேபோன்று அம்பகாமம் வடக்கு பகுதியில் விடுதலைப் புலிகளின் விமான ஓடு பாதை படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இது படையினரால் கைப்பற்றப்பட்ட மூன்றாவது ஓடுபாதையாகும்.

மாங்குளம் பகுதியில் அமைந்துள்ள நெடுங்கேணிப் பகுதி கடந்த 21ஆம் திகதி படையினரால் கைப்பற்றப்பட்டது.

. விடுதலைப் புலிகளின் பிடியில் இருந்து தப்பி வருவோரின் தொகை அதிகரித்து வருகிறது. இந்த டிசம்பர் மாதத்தில் மட்டும் இதுவரை 363 பேர் தப்பி வந்து படையினரிடம் தஞ்சமடைந்துள்ளனர். இவ்வருடம் ஜனவரியில் இருந்து இன்று (நேற்று) வரையில் ஆயிரத்து 754 பேர் தப்பி வந்துள்ளனர்.

நேற்று முன்தினம் 9 பேர் படையினரிடம் தஞ்சமடைந்துள்ளனர். இவர்கள் அனைவருக்கும் அடிப்படை வசதிகளை படையினர் வழங்கியுள்ளனர்.

இதேவேளை பாதுகாப்பு படையில் சேர்ந்து கொள்வோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. கடந்த ஒக்டோபர் மாதம் வரையில் 10 ஆயிரத்து 298 பேர் படையில் புதிதாக இணைக்கப்பட்டுள்ளனர்.

ஜனவரி 2ஆம் திகதி கொமாண்டோ மற்றும் விசேட அதிரடிப்படைக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் பிரிகேடியர் உதய நாணயக்கார மேலும்கூறினார். (ச-5)

## சாதாரண தர கணிதபாட...

வினாத்தாள் பரீட்சார்த்திகளுக்கு பெரும் இக்கட்டான நிலையைத் தோற்றுவித் தாகவும் அதனால் பெரும்பாலான மாணவர் களுக்கு பரீட்சை எழுத முடியாமல் போனதாக வும் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டன.

அதனையடுத்து இந்த வினாத்தாள் குறித்து ஆராய்வதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகம், பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் புத்திஜீவிகள் அடங்கிய குழு ஒன்றை நியமித்தார். இதேவேளை கல்வி அமைச்சும் இது குறித்து ஆராய மேலதிக செயலாளர் தலைமையில் குழு ஒன்றை நியமித்தது.

இரண்டு குழுக்களும் நேற்று முன்தினம் அவற்றின் அறிக்கைகளை சமர்பித்திருந்தன. இந்த அறிக்கைகளை அமைச்சரவை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டது. பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் அனைவருக்கும் அநீதி இழைக்கப்படாத வகையிலான ஒரு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இரண்டு அறிக்கைகளிலும் பரிந்துரைக்கப்பட்டிருந்தன.

இதனையடுத்து நடந்து முடிந்த பரீட்சையின் புதிய பாடத்திட்டத்துக்கான கணிதப்பாட வினாத்தாள் பகுதி இரண்டை இரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாக மூன்று வார காலத்திற்குள் மீண்டும் அந்தப் பாடத்துக்கான பரீட்சையை நடத்தவும் அமைச்சரவை முடிவு செய்ததாக அறிவித்த கல்வி அமைச்சர் பரீட்சையை மீண்டும் நடத்தும் நாள் குறித்து பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் நேற்று முடிவு செய்வார் என்றும் அறிவித்தார்.

இப்பரீட்சையை நடத்தும் நாள் குறித்து பரீட்சை ஆணையாளர் நாயகத்திடம் கேட்டபோது எதிர்வரும் ஜனவரி 17ஆம் திகதி மீண்டும் நடத்தவுள்ளதாக கூறினார் என கல்வி அமைச்சு தெரிவித்தது. (ச-5)

## பெற்றோல் விலையைக்...

உயர் நீதிமன்றம் தன்னிச்சையாக பெற்றோல் விலையைக் குறைக்குமாறு தீர்ப்பு வழங்கவில்லை. நிதியமைச்சின் செயலாளர் நீதிமன்றத்திடம் சமர்பித்த விலை சூத்திரத்துக்கமையவே நீதிமன்றம் இந்த உத்தரவை வழங்கியது. நிதியமைச்சர் என்ற வகையில் பெற்றோலின் உண்மையான விலையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிந்து கொள்ளாமல் இருக்க வாய்ப்பில்லை என அவர் குறிப்பிட்டார்.

உயர்நீதிமன்றம் வழங்கியிருக்கும் தீர்ப்பை அரசாங்கம் மதிக்காமல் இருப்பதானது நீதிமன்றத்தை மதிக்காமல் மக்களும் செயற்படலாம் என்ற தவறான செய்தியை நாட்டுப் பிரஜைகளுக்கு வழங்குவதாக அமைந்துள்ளது என அநுரகுமார திஸநாயக்க கூறினார்.

எந்த விதமான சாக்குப் போக்கும் சொல்லாமல் பெற்றோல் விலையை 100ரூபாயாக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இரண்டு நாட்களுக்குள் விலை குறைக்கப்படாவிட்டால் பாரிய ஆர்ப்பாட்டம் நடக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை அரசாங்கத்துக்கும் தேசிய சுதந்திர முன்னணிக்கும் இடையிலான கள்ளக் காதல் தற்பொழுது திருமணமாக மலர்ந்திருப்பதாக ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் கூறினார்.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களில் ஆளும் கூட்டணி அரசாங்கத்துடன் இணைந்து போட்டியிடுவது பற்றி ஜே.வி.பியிலிருந்து பிரிந்து சென்றவர்கள் உருவாக்கியிருக்கும் தேசிய சுதந்திர முன்னணி புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளமை குறித்தே விஜித ஹேரத் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கத்துக்கும் தேசிய சுதந்திர முன்னணிக்கும் இடையிலிருந்த கள்ளக் காதல் தற்பொழுது திருமணத்தில் முடிந்துள்ளது. சீதனத்தைப் பெற்றுக் கொண்டு திருமணம் முடிந்துள்ளார்கள் என குறிப்பிட்டார்.

ஜே.வி.பியைக் காட்டிக்கொடுத்து விட்டு கட்சியிலிருந்து பிரிந்து சென்ற 11 பேரும் மீண்டும் ஜே.வி.பியில் இணைத்துக் கொள்ளப்பட மாட்டார்கள் எனவும் விஜித ஹேரத் நேற்று ஊடகவியலாளர் மாநாட்டில் கூறினார்.(ச-5)


துளிர்கள் நிறுவனத்தின்
உள சமூக தொழில்வாண்மை கற்கை நெறி

✦ பயிற்சி பிரிவு :- 06
✦ பயிற்சிக் காலம் :- 12 மாதங்கள்
✦ தகைமை :- G.C.E. A/L, சமூக சேவையில் ஈடுபாடு.
✦ விரிவுரைகள் :- சனி, ஞாயிறு (வார நாட்களில் கற்க விரும்புவோர்க்கு 2 நாட்கள் தனியான பிரிவு)
✦ இவற்றுடன் 06 மாதங்கள் அடிப்படை ஆங்கில சான்றிதழ் கற்கை நெறி SPOKEN ENGLISH CLASSES

ஆர்வமுள்ள இருபாலாரும் 30.12.2008க்கு முன் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம்

குறிப்பு:- அரச,அரச சார்பற்ற ஊழியர்களும், மாணவர்களும், ஆசிரியர்களும் இக் கற்கை நெறிகளை தொடரலாம். வயது உங்களுக்கு ஒரு பிரச்சினையல்ல.

இயக்குநர்
துளிர்கள்

O.L.R. அவனியூ,
3-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

118,பலாலி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(2025)



SUBRA (14) கல்வி நிறுவனம்
சித்தங்கேணி

வழிகாட்டல் கருத்தரங்கு
2011 A/L மாணவர்களிற்கானது

காலம்: 26.12.2008 (வெள்ளி) 3.00 - 6.00
இடம்: வட்டு. இந்து நவோதயாக் கல்லூரி, சித்தங்கேணி

வளவாளர்கள்
திரு.க.தேவராஜா
(பீடாதிபதி, வணிக முகாமைத்துவ பீடம்)
கலாநிதி வை.மிகுந்தன்
(தலைவர், விவசாய பீடம்)
கலாநிதி க.வேல்நம்பி
(சிரேஷ்ர விரிவுரையாளர், வணிக முகாமைத்துவ பீடம்)

எதை? எவ்வாறு? தெரிவு செய்வதன் வாயிலாக வெற்றிபெறலாம்
அரியதோர் சந்தர்ப்பம் ஆசனங்கள் வரையறுக்கப்பட்டவை
(C-1902)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.